பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஐப்பசி 06 புதன்கிழமை 23.10.2019 கதிர் 352

**இனி இது ரகசியம் அல்ல!**

யாழ்ப்பாணத்தின் சிரேஷ்ட அரச ஊழியர் ஒருவரை நேற்று யாழ். நகரில் சந்தித்தேன். சோலி, சுரட்டுக்குப்போகாதவர். தானுண்டு, தன் வேலையுண்டு என இருப்பவர்.

இராவணன் ஆண்டால் என்ன, இராமன் ஆண்டால் பக்கம் 02



# சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் கோட்டாபயவை நிறுத்தவேண்டும்!

## யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 23

முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதிவேட்பாளருமான கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து பக்கம் 03

# கஜேந்திரகுமார் சீன ஏஜெண்டா?

## சந்தேகம் வெளியிடுகின்றார் சுரேஷ்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 23

எடுத்ததற்கெல்லாம் எம்மை இந்திய அரசின் ஏஜெண்டுகள் என்று கஜேந்திரகுமார் குற்றம்சாட்டி வருகின்றார். நாம் எதைச் சொன்னாலும் அதை இந்தியா சொல்லியே செய்கிறோம் என அவர் கூறுகிறார். அவரின் இந்தச் செயல் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. அவர் சீனாவின் ஏஜெண்டாக இருக்கிறாரா என்று சந்தேகம் ஏற்படுகின்றது.

– இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன். பக்கம் 03

## மகேஷ் சேனநாயக்கவுக்கு நேற்றுத் திடீர் சுகவீனம்!



கொழும்பு, ஒக். 23

முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனாதிபதி வேட்பாளருமான லெப்டினண்ட் ஜெனரல்மகேஷ்சேனநாயக்க, நேற்று மதியம் திடீர் சுகவீனம் காரணமாக பலாங்கொடை பக்கம் 03

## ஏகாதிபத்திய இராணுவ ஆட்சியா? ஜனநாயக ஆட்சியா? எது வேண்டும்?

### சஜித் பிரேமதாஸ கேள்வி



கொழும்பு, ஒக். 23

நாட்டில் ஏகாதிபத்திய இராணுவ ஆட்சியையா அல்லது சுதந்திரமான சிவில் ஜனநாயக ஆட்சியையா அமைப்பது என்ற முடிவை எடுக்க வேண்டிய தருணம் இது எனப் பக்கம் 03

## ரணில் அரசைக் கலைக்க மக்கள் கருத்துக் கணிப்பு!

### தயாசிறி ஜயசேகர ஆலோசனை

கொழும்பு, ஒக். 23

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவான பின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைப் பதவி நீக்கிப் புதிய அரசை அமைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு பக்கம் 03

## வித்தியானந்தக் கல்லூரி முன்பாக நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம்

### அதிபரை உடன் நியமிக்குமாறு கோரி



முல்லைத்தீவு, ஒக். 23

முல்லைத்தீவு – முள்ளியவளை, வித்தியானந்த கல்லூரிக்கு அதிபரை நியமனம் செய்யுமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. பக்கம் 03

## தமிழ்,முஸ்லிம் வாக்குகளை சிதைக்க 4முனைத் திட்டம்!

### அமைச்சர் மனோ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 23

வெளிநாட்டுநிறுவனமொன்றின் ஆலோசனைக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள திட்டம் ஒன்றின் மூலம் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைச் சிதறடித்து, சஜித் பிரேமதாஸவின் வெற்றியைத் தடுத்து நிறுத்த, பிரதானஎதிர்க்கட்சியினர்முயற்சிகளை பக்கம் 02

## மணியந்தோட்டம் இளைஞர் கொலை; தந்தைக்கும் மகனுக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம் அரியாலை மணியந்தோட்டத்தில் இளைஞர் ஒருவரை கோடரியால் அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் தந்தையும் மகனும் பொலிஸில் சரணடைந்த நிலையில் அவர் பக்கம் 03

## கனடாப் பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி மீண்டும் வெற்றி!

மொன்றியல், ஒக். 23

கனடா பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றத்தைத் தொடர்ந்து நாட்டுமக்களுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார் ஜஸ்ரின் ரூடோ. பக்கம் 02




## பணத்துக்காகவே சஜித்தை கூட்டமைப்பு ஆதரிக்குமாம்

### கூறுகின்றார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஒக். 2

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கவை ஆதரிக்கும்சாத்தியங்கள் தென்படுகின்றன எனத் தெரிவித்துள்ளார் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

ஐ.தே.கவைஆதரிப்பதெனக் பக்கம் 03

## இந்தியாவின் பேச்சைக் கேட்டு எந்த முடிவுமே எடுக்கவில்லை

### கஜேந்திரகுமாருக்கு சிவசக்தி பதில்

வவுனியா, ஒக். 23

பொது ஆவணத்தில் கையெழுத்திட்ட 5 தமிழ்க் கட்சிகளும் இந்தியாவின் பேச்சைக் கேட்டு எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க பக்கம் 02

## மைத்திரி பௌசி சஜித்துக்கு ஆதரவு

கொழும்பு, ஒக். 23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் சஜித்துக்கே ஆதரவளிக்கிறேன். அது மைத்திரியின்வழியைப்பின்பற்றுவதாகும்

– இவ்வாறு தெரிவித்தார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பக்கம் 03

## இனி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ன, கூட வந்த குரங்கு ஆண்டால் என்ன என்று தன்பாட்டுக்கு வேலை பார்ப்பவர். அரசியல் பக்கம் தலைவைத்தும் படுப்பவர் அல்லர். சுருக்கமாகக் கூறுவதானால் அரசியல் குறித்து அலட்டியே கொள்ளாதவர்.

அப்படிப்பட்டவர் நேற்று நான் சந்தித்தபோது சற்றுக் குழப்பமாக இருந்தார்.

அவரது பிரச்சினை என்னவென்று கேட்டேன்.

அவளைத் தொடுவான் ஏன்? அவஸ்தைப்படுவான் ஏன்?' –என்ற மாதிரி இருந்தது அவரது பிரச்சினை.

நடந்தது இவ்வளவுதான்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இளம் எம்.பியான நாமல் ராஜபக்ஷ கடந்த வாரம் யாழ் வந்திருந்தார் அல்லவா?

யாழ்ப்பாணத்தின் புத்திஜீவிகள், சிரேஷ்ட பிரஜைகள் என ஒருசிலடசின்பேரையாழ்ப்பாணத்தில் அவர் சந்தித்தார். ஒரு பிரபல ஹோட்டலின் மண்டபத்தில் சந்திப்பு.அவர்பேசியவைஅரசியல்தான். நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய பிரசாரம்தான்.

கூட்டத்தில் பங்குபற்றிய பலர் நாமலிடம் கேள்விக் கணைகளையும் தொடுத்தனர்.

அவை எல்லாம் சமூக ஊடகங்களில் ஒளிபரப்பாகின.

பிறகென்ன? யாழ்ப்பாணத்தின் ஸ்ரீமான் பொதுஜனம் எப்போதும்கொஞ்சம்ஸ்மாட்'தானே...! தனது மொட்டைப் பெட்டிஸம்' கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்டார்.

எல்லா விடயங்களும் விலாவாரியாக – காணொலி ஆதரங்களுடன் –தேர்தல்ஆணையத்தை எட்டிவிட்டன.

தேர்தல் சட்டத்தின்படி, அரச ஊழியர்கள் – அதுவும் சிரேஷ்ட அரச ஊழியர்கள் – தேர்தல் தொடர்பான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது.

அரசியல் நடவடிக்கைகளில்' ஈடுபடக்கூடாது என்றுதான் சட்டம் கூறுகின்றதே தவிர, அரசியல் நடவடிக்கைகள்' என்றால் என்ன என்பதற்கு வியாக்கியானம் ஏதுமில்லை.

நாமலின் கூட்டத்திற்குப் போயிருந்தமை – பார்வையாளர்களாக இருந்தமை –தேர்தல் தொடர்பான அரசியல் நடவடிக்கையில்' ஈடுபடும் செயற்பாடு எனத் தேர்தல் ஆணையம் கருதுமா, அப்படிக் கருதினால் தனது வேலைக்கு ஆப்பாகி விடுமா என்பதுதான் எனது நண்பரான அரச ஊழியரின் பயம்.

அவர் இன்னொரு விடயத்தையும் சொன்னார். கூட்டத்தில் பிரசன்னமாகி இருந்து வெறும் பார்வையாளராக மட்டுமே தாம் பங்குபற்றினாராம். ஆனால் தமது நண்பர் ஒருவர் மைக்'கை வாங்கி நாமலிடம் கேள்விக் கணை தொடுத்து அரசியல்' செய்திருக்கின்றார். அவர் தம்மை விட அதிகம் வெருண்டு போய் இருக்கின்றார் என்கிறார் இவர்.

பாவம், இந்த அரச ஊழியர்கள்.

தேர்தல் ஆணையத்தின் கருத்தைசற்றுத்தட்டிப்பார்த்தேன்.

இந்த விடயம் தொடர்பான காணொலி எல்லாம் அங்கு விலாவாரியாக ஆராயப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அந்தக் கூட்டத்தில் பங்குபற்றிய சிரேஷ்ட அரச ஊழியர்கள் யாரேனும், தேர்தல் பணிகளோடு நேரடியாகத் தொடர்புபட்டிருக்கின்றார்களா என்று தேர்தல் ஆணையம்புலனாய்வுசெய்வதாகவும் தகவல். அரசின் தேர்தல் பணிகளோடு சம்பந்தப்பட்ட எவரும் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தால்– பார்வையாளர்களாகத் தன்னும் கலந்து கொண்டிருந்தால் – சிக்கல் என்ற மாதிரித்தான் தெரிகின்றது.

எதற்கும் நேர காலத்துடன் தேர்தல்ஆணையத்துடன்தொடர்பு கொண்டுசம்பந்தப்பட்டோர்நிலைமைகளைச்சமாளித்துக்கொள்வது நல்லது என நினைக்கிறேன்.

தேர்தல்ஆணையம்குறித்துக் குறிப்பிடுகின்றமையால் இன்னொரு விடயத்தையும் இங்கு தொட்டுக்காட்டலாம் என நினைக்கிறேன்.

கொழும்பு நியூமகஸின் சிறையில் சுமார் 14 ஆண்டுகளுக்கு மேல்தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல்கைதி ஒருவரும்தேர்தல் ஆணையத்துக்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்.

இராணுவ அதிகாரிகள் சிலர் சிறைக்கு வந்து சில பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் குறித்து விசாரித்துச் சென்றுள்ளனர் என்றும், அதனால் தங்கள் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் அந்தக் கைதி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாராம்.

அந்த முறைப்பாட்டுக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டுள்ள தேர்தல் ஆணையம் உரிய நடவடிக்கைக்காக அந்தக் கடிதத்தை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகின்றது.

நியூமகஸின்கைதிகள்விடயம் பற்றிக் குறிப்பிடுகின்றமையால் அதை ஒட்டிய மற்றொரு விவகாரத்தையும் இங்கு பிரஸ்தாபிக்கலாம் என நினைக்கிறேன்.

நியூ மகஸின் சிறையில் மூன்றுசெல்லுகளில்தலா முப்பது முப்பது பேர்களாக ஏறத்தாழ எண்பது தமிழ் அரசியல் கைதிகள் உள்ளனர். ஜி' செல்லில் உள்ள கைதிகள் அங்கு ஒரு சிறிய வில்வ மரத்துக்கு அருகில் ஒரு மிகச் சிறிய சிவலிங்கத்தை வைத்து வணங்கி வருகின்றனர். அண்மையில் நவராத்திரியின் போது தமிழ் அரசியல் கைதிகள் அங்குதான்பூசைவழிபாடுகளைச் செய்தனர். சிறை அதிகாரிகள் கூட அந்தப் பூசைகளில் பங்கு கொண்டனர்.

நேற்று முன்தினம் அங்கு ஒரு சம்பவம் நடந்தது. சிறை மலகூடத்திருத்தத்துக்காகக் கொண்டு வரப்பட்ட சிமெந்தை எடுத்து மேற்படி சிறிய கோவிலில் ஒரு தளத்தை அமைத்துள்ளார்கள் தமிழ் அரசியல் கைதிகள். அவ்வளவுதான் நடந்தது.

சிறைக்குள் நிர்வாகத்தன் அனுமதியின்றி கோவில் அமைக்கப்பட்டதாகச் செய்தி பரவ.... பிறகு என்ன? தண்டனைக்கைதிகளைத் தங்கள் பணியாளர்களாக்கி கோவிலில் புதிதாக சிமெந்தில் அமைக்கப்பட்ட தளத்தை நேற்று உடைத்தெறிந்தது சிறைநிர்வாகம். அந்த வில்வமரச் சிவலிங்கக் கோயிலில் தொடர்ந்து பூசை வழிபாடுகள் நடத்த சிறை நிர்வாகம் அனுமதிக்குமா என்று தெரியாமல் அந்தரிக்கின்றார்கள் தமிழ்க் கைதிகள்.

★ ★ ★

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இன்று கொழும்பில் கூடுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஐந்து கட்சிகள் கூட்டுச் சேர்ந்து ஒப்பமிட்ட – 13அம்சங்கள் அடங்கிய – தமிழர்களின் அபிலாஷைகளை ஒட்டுமொத்தமாகப் பிரதிபலிக்கின்ற – ஆவணத்தைக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு இன்று உத்தியோக பூர்வமாக ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்கவிருக்கின்றது.

அதேசமயம் இதே 13 அம்ச ஆவணங்களில் உள்ள விடயங்களை ஆராய்வதற்காகக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கூட்டமும் நாளை கொழும்பில் நடக்கவிருக்கின்றது எனத் தெரிகின்றது.

இதன் பின்னர் ஐந்து கட்சிக் கூட்டு அமைப்பின் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்போதுதான் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழர் தரப்பின் ஒட்டுமொத்த முடிவு குறித்தும் பரிசீலிக்கப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிகின்றது.

- மின்னல் -

## கனடாப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனடாவில் பொதுத் தேர்தல் கடந்த திங்கட்கிழமை நடந்து முடிந்தது. இதனைத் தொடர்ந்து நேற்றுத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இறுதி வாக்கு முடிவுகளின்படி லிபரல் கட்சி 156 இடங்களிலும், கொன்சர்வேடிவ் கட்சி 121 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. பிற இடங்களை சுயேச்சைகள் மற்றும் பிற கட்சிகள் கைப்பற்றியுள்ளன.

இந்த நிலையில் லிபரல் கட்சி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

தேர்தலில் வெற்றி பெற்றாலும் லிபரல் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே சுயேச்சைகள் மற்றும் சிறு கட்சிகளுடன் இணைந்து லிபரல் கட்சி ஆட்சி அமைக்க உள்ளது. இதனைத் தொடர்ந்து மீண்டும் கனடா பிரதமராக பதவி ஏற்கிறார் ஜஸ்ரின் ருடே. (மற்றொரு செய்தி 9ஆம் பக்கத்தில்) (ஐ)

## இந்தியாவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

மலசலகூடத்துக்குப் போவதென்றாலும் இந்தியத்தூதுவரைக் கேட்டே 5 தமிழ்க் கட்சிகளும் செயற்படுவார்கள் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் குற்றம் சாட்டியமைதொடர்பில்எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஏதோ ஒரு வகையில் தீர்வைப் பெற்றுகொள்ளும் முயற்சியாகத்தான் ஐந்து கட்சிகளும் ஒன்றிணைந்தன.

யாருடைய பேச்சையும் கேட்டு அந்த முடிவுக்கு அவர்கள் போகவில்லை. குறிப்பாக இந்தியாவின் பேச்சைக் கேட்டு எந்த முடிவையும் எடுக்கவில்லை.

தற்போது தமிழ்க் கட்சிகளால் தயாரிக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகளைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று கோட்டாபய நேரடியாகத் தெரிவித்துள்ளமையுடன், எந்த ஓர் உடன்படிக்கைக்கும் இணங்கி வரமாட்டோம் என்று சஜித் பிரேமதாஸவும் கூறியிருக்கிறார். வடக்கு – கிழக்கு இணைப்பை ஏற்கமோட்டோம் என்று மக்கள் விடுதலை முன்னணியும் கூறியிருக்கின்றது.

தமிழ் மக்கள் சஜித்துக்கு வாக்களிக்கும் நிலைமை இருக்குமானால் நிச்சயமாக நாம் அவருடன்தான் பேச்சு முன்னெடுக்க வேண்டும். அத்துடன் இந்த 13 கோரிக்கைகளைப் பரிசீலித்து தீர்வைவழங்கவேண்டிய பொறுப்பு ஏனைய வேட்பாளர்களை விட அவருக்குதான் மிக அதிகமாக இருக்கிறது.

எனவே அவருக்கு வாக்கு வேண்டும் என்றால் எமது கோரிக்கையை ஏற்கவேண்டும். இதேவேளை, எமக்குத்தேவையானவிடயங்களை நிராகரித்துவிட்டு தமிழ் மக்களின் வாக்குகளை மாத்திரம் சஜித் பிரேமதாஸ கோருகின்றமையில் எந்தவித நியாயமும் இல்லை.

நாம் பலதரப்பட்டோரின் வேண்டுகோளுக்கிணங்க, ஒவ்வொரு கட்சியினதும் முன்மொழிவுகளைப் பல்கலைகழக மாணவர்களிடம் சமர்ப்பித்தோம், அவை தொகுக்கப்பட்ட பின்னரே 13அம்சக் கோரிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

தயாரிக்கப்பட்ட இந்தக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதற்கு முன்னர. இருந்தே ஒரு தரப்புக்கு ஆதரவுவழங்கும்செயற்பாட்டைக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு தன்னிச்சையாக செயற்பட்டால் இந்தப் பொது இணக்கப்பாடு என்பது செயலிழக்கும் நிலைமையே ஏற்படும். எனவே கூட்டமைப்பு பொறுப்புடன் செயற்படவேண்டும்.

அத்துடன் எங்களைச் சந்திக்க விரும்புவர்களைச் சந்தித்து இந்த கோரிக்கைகள் தொடர்பாகப் பேசலாம். பேச விரும்பாதவர்களோடு பேசவேண்டிய அவசியம் இல்லை. கோட்டாபய நேரடியாகவே நிராகரித்திருக்கிறார். எனவே மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய இரண்டு கட்சிகளுடனும் எமது சந்திப்பு இருக்கிறது.

அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எங்களது பிரச்சினைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம்வழங்கியுள்ளார்கள்என்பதைப் பார்த்து, நாம் இந்த 5 கட்சிகளும் மீண்டும் கலந்துரையாடி எடுக்க வேண்டிய நிலைப்பாடு தொடர்பாக அறிவிப்போம். – என்றார். (ஐ)

## தமிழ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளனர். இந்த நான்கு முனை தந்திரத் திட்டம் பற்றிய தகவல் தனக்குக் கிடைத்துள்ளது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும், அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தை ஹம்டன் வீதியில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே அமைச்சர் மனோ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வாக்காளர்களைத் திசை திருப்பி தந்திரமான முறையில் தேர்தல் வெற்றிகளைப் பெற்றுத் தருவதில் வெகுவாகக் கைதேர்ந்த ஒரு வெளிநாட்டு நிறுவனம் ஒன்றைப் பிரதான எதிர்க்கட்சி வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

மேற்கு, வடக்கு, கிழக்கு, மலையகம், தெற்கு என நாடெங்கும் வாழும் தமிழ் – முஸ்லிம் மக்களின் வாக்குகள் எக்காரணம் கொண்டும் எங்கள் புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்குக் கிடைத்து விடக்கூடாது என்ற இந்த நான்கு முகத் திட்டத்தை இந்த வெளிநாட்டு நிறுவனமே பிரதான எதிர்க் கட்சிக்கு உருவாக்கித் தந்துள்ளது. இதற்காகப் பெருந்தொகைக் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டுள்ள இந்நிறுவனத்தின் ஆலோசகர்கள் இன்று தீவிரமாக பிரதான எதிர்க்கட்சியினரின் வெற்றிக்காகப் பணியாற்றுகிறார்கள்.

இதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட விசேட குழுக்கள், இந்த நான்கு முனை தந்திரத் திட்டத்தை அமுல் செய்யும் நோக்கில் நாடு முழுக்கக் களமிறக்கப்பட்டுள்ளன. தற்போது எனக்கு இந்த நான்கு முகத் தந்திர திட்டத்தின் விவரங்கள் கிடைத்துள்ளன. இதன்படி, பிரதான எதிரணியின் முதல் முகம், தமிழ் மக்கள் மத்தியில் ஊடுருவி தனது சின்னத்துக்கு வாக்கு சேகரிக்க முயல்கின்றது. பிரதான எதிரணியின் இரண்டாம் முகம், தமக்கு தமிழ் – முஸ்லிம் மக்களின் வாக்கு கிடைக்காவிட்டால், இந்தத் தேர்தலில் போட்டியிடும் தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களுக்கு தமிழ், முஸ்லிம் மக்களை வாக்களிக்க வைக்க முயல்கிறது.

பிரதான எதிரணியின் மூன்றாம் முகம், தனது சின்னத்துக்கோ அல்லது தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பாத தமிழ், முஸ்லிம் மக்களை, இந்த தேர்தலில் போட்டியிடும் ஏனைய சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வைக்க முயல்கிறது. மேற்கண்ட மூன்று முயற்சிகளும் முடியாமல் போனால், பிரதான எதிரணியின் நான்காவது முகம், தமிழ் பேசும் மக்களை, குறிப்பாக தமிழ் வாக்காளர்களை, தேர்தல் வாக்களிப்பில் கலந்துக்கொள்ளாமல், தடுத்து, தேர்தலைப் பகிஷ்கரிக்க வைக்க முயல்கிறது.

மேற்கண்ட நான்கு தந்திர முயற்சிகளை முன்னெடுக்கும் பிரதான எதிரணியின் நான்கு முகங்களும், திட்டமிட்டுப் பணியாற்றுகின்றன. இந்த நான்கு முனைத் திட்டங்கள் மூலமாக அளிக்கப்படும் அல்லது பகிஷ்கரிக்கப்படும் வாக்குகள், சஜித்துக்கு எதிரான வாக்குகள் என்பதால், எமக்கு வரவேண்டிய இந்த வாக்குகளைச் சிதறடித்து, அதன் மூலம் தாம் வெற்றி பெற்று விடலாம் என்பதே இவர்களது கனவு இலக்கு.

இதற்காகப் பிரதான எதிரணி பல முகவர்களைத்வதமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிரசாரக்களத்தில் இறக்கியுள்ளது. அவர்களுக்கு பெருந்தொகை நிதி வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் சென்று பிரதான எதிரணிக்கு ஆதரவாக வாக்குக் கோருகிறார்கள்.

அதேவேளை, போட்டியில் உள்ள தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சிங்கள வேட்பாளர்களுக்கு ஆதரவாகவும் வாக்குக் கோர வேறு பல குழுக்கள் இவர்களால் களமிறக்கப்பட்டுள்ளன. தமக்கு வாக்கு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, சஜித்துக்கு வாக்கு போகாமல், ஏனைய தமிழ், முஸ்லிம், சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதே சிறந்தது என இந்த வெளிநாட்டு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இத்துடன் நிறுத்தி விடாமல், முகநூல் உள்ளிட்ட சமூக ஊடகங்களில், தமது பதிவுகள் மூலம் பிரபலமாகி பரிச்சயமாகியுள்ள பலரை விலைக்கு வாங்கியும், போலி பெயர்களில் முகநூல் கணக்குகளை ஆரம்பித்தும், பல தமிழ், முஸ்லிம் சமூக ஊடகர்கள் திட்டமிடப்பட்டு தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் பிழையான பொதுஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் முகமாகக் களமிறக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் தேர்தல் பகிஷ்காரம் என்ற கொள்கையை முன்னெடுப்பது இவர்களது தலையாய பணியாக ஒதுக்கப்பட்டு இருக்கின்றது. இவை அனைத்தும் பிரதான எதிர்கட்சியால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள வெளிநாட்டு நிறுவனத்தின் திட்டங்களாகும் – என்றார்.

## சர்வதேசக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் யாழ்ப்பாண மாவட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்வியங்காட்டிலுள்ள காணாமற்போனோர் அலுவலகத்தின் முன்பாக நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஐ.நா. அமைதிப் படை வரவேண்டும், காணாமற்போனோர்அலுவலகத்தைஅகற்று!, கோட்டாவைக் கைது செய்!, எங்கள் உறவுகள் எங்கே?, சர்வதேசமே! உடனடியாகக் கோட்டாவைக் கைது செய்!, குற்றவாளிகளைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தி பக்கச் சார்பற்ற விசாரணையை நடாத்து!, கோட்டா ஓர் உயிர்கொல்லி!, எமது பிள்ளைகளுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்க உனக்கு அருகதையில்லை – ஆகிய கோஷங்களை எழுப்பியிருந்தனர். (ஐ-07)

## ஏகாதிபத்திய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆதரவளிப்பதற்கு முன்வந்திருக்கும் நிலையில், அதனை அறிவிக்கும் நிகழ்வு நேற்றுக் கொழும்பிலுள்ள இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த அவர் நான் ஆட்சியமைத்த பின்னர் சர்வதேச தரநியமங்களுக்கு அமைவான ஊடகப் பயிற்சி நிலையமொன்றை அமைத்து அதனூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறேன்.

அதன்மூலமாக தேசிய, சர்வதேச ஊடகவியலாளர்களுக்கு இடையிலான ஊடாட்டத்தை ஏற்படுத்தி, மக்களுக்குச் சரியான முறையில் தகவல்களை வழங்க முடியும்.

ஊடகவியலாளர்களின் கைகளில் தற்போது முக்கியமானதொரு பொறுப்பு உண்டு. கடந்த காலத்தில் நானும், எனது பிரதிவாதியும் ஊடகங்களை எவ்வாறு கையாண்டோம் என்பதைச் சீர்தூக்கிஆராய்ந்துபார்க்கவேண்டும்.

நான் என்னுடைய அரசியல் பயணத்தில் ஹிட்லர், இடியமீன், ரொபேட் முகாபே ஆகியோரைப் பின்பற்றி, அவர்களைப் போல உருவாக வேண்டுமென்ற எண்ணத்தில் எப்போதும் பயணித்தவன் அல்லன்.

நாட்டு மக்களுக்கு உண்மைகளைக் கூறத்தக்க, அரசியல்வாதிகளுக்குப் பாடம் கற்பிக்கத்தக்க நிலையிலுள்ள ஊடகவியலாளர்கள் யாரை நாட்டின் தலைவராகத் தெரிவு செய்வது என்ற சரியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில்ஏகாதிபத்தியஇராணுவ ஆட்சியையா அல்லது சுதந்திரமான சிவில் ஜனநாயக ஆட்சியைஸ்தாபிப்பதுஎன்றுமுடிவை எடுக்கவேண்டிய தருணம் இதுவாகும் – என்றார். (ஐ)

## மகேஷ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைகள் வழங்கப்பட்ட பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறினார் எனத்தகவல்கள் தெரிவித்தன. பலாங்கொடை நகரில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது அவர் திடீர் சுகவீனத்துக்கு உள்ளாகியுள்ளார்.

## கஜேந்திரகுமார்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டப்பிராயில் உள்ள தனது இல்லத்தில் நேற்றுத் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பொது ஆவணமொன்றைத் தயாரித்து கையொப்பம் இட்டுள்ள ஐந்து தமிழ்க் கட்சிகள் தொடர்பிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடுமையான விமசர்னங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்திருந்தார்.

இந்தக் கருத்துக்குக்குப் பதிலளிக்கும்போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த்தேசியபரப்பில்இருக்கக்கூடிய ஐந்து கட்சிகள் இணைந்து 13 கோரிக்கைகளை ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் அவர்களது கட்சிகளிடம் முன்வைத்திருந்தன. இந்த 13 கோரிக்கைகளையும் உருவாக்குவதில் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியஆறுகட்சிகளும்பங்களித்தன. நாங்கள் இணைந்துதான் இந்த ஆவணங்களைத் தயார் செய்திருந்தோம்.

இதில் இன்னும் குறிப்பாகக் கூறுவதானால் இந்த ஆவணத்திலுள்ள அனைத்து விடங்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஏற்றுக் கொண்டிருந்தது. ஆனாலும் அவர்கள் கூறி, எங்களால் ஏற்றுக்கொள்ளப்படாத ஒரு விடயம் இந்த ஆவணத்தில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே 13 கோரிக்கைகள் அடங்கிய இந்த ஆவணத்தில் ஐந்து கட்சிகள் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டிருந்தாலும் மக்கள் முன்னணியையும் உள்ளடக்கியதாக ஆறு கட்சிகளும் ஏற்றுக் கொண்ட ஆவணமாகத்தான் இது இருக்கின்றது.

குறிப்பாக இந்த ஆவணத்தை இறுதிப்படுத்துகின்ற நேரத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது பல கருத்துக்களையும் திருத்தங்களையும்சொல்லியிருந்தது. அந்தத் திருத்தங்கள் யாவும் இதில் உள்ளடக்கப்பட்டும் இருந்தன. அவ்வாறான சூழ்நிலையில் தற்போது இந்த ஐந்து கட்சிகளும் இந்திய அரசு சொல்வதைக் கேட்டுத்தான் இந்த வேலைகளைச் செய்து முடித்திருக்கின்றன என்றும் இந்திய அரசின் ஏஜென்டுகளாக இவர்கள்செயற்படுகின்றார்கள் என்றும் கூறுவது பலத்த சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

ஏனென்றால் இந்த ஆவணத்தில் வந்திருக்கும் விடயங்களைச் சொன்னவர்கள் பலதிருத்தங்களைச்சொன்னவர்கள் இவர்கள்தான். ஆகவே, இந்தத் திருத்தங்களை இவர்கள் யார் சொல்லிக் கொண்டு வந்தார்கள் என்ற கேள்வியும் எழுகின்றது. அதில் விசேசமாக இந்தியா சொல்லித்தான் இந்தத்திருத்தங்களைக் கொண்டு வந்தார்களா? என்ற கேள்வி உள்ளது. ஏனென்றால் இந்தத்திருத்தங்கள்உள்ளடங்கிய ஆவணத்தைத்தான் இப்போது இவர்கள் விமர்சிக்க முற்படுகின்றார்கள்.

ஆகவேஇந்தத்திருத்தங்களைச் சொன்னதால் அவர்களுக்கும் இந்த ஆவணத்தில் முழுமையானபங்குபற்றல் இருக்கின்றது. அந்த வகையில் அவர்களும் ஏற்றுக்கொண்ட இந்த ஆவணத்தை ஆதரித்து கையெழுத்து வைத்தவர்களை இந்திய அரசின் ஏஜென்டுகள் என்று சொல்லி அவர்கள் பேசுகின்றனர். உண்மையில் இந்தியா என்று சொன்னாலே பிரச்சினை என்ற விதமான நோய் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

ஏனெனில் எல்லா விடயங்களையும்பார்க்கின்றபோது எடுத்த எடுப்பில் உடனடியாகவே அது இந்திய ஏஜென்டுகள் செய்கின்ற வேலை அல்லது அவ்வாறானவர்களுடைய கருத்து அல்லது அவர்கள் சொன்னதை இவர்கள் செய்கின்றார்கள் என்று சொல்லி வருகின்றார்கள். அப்படியானால் நான் கேட்கின்றேன் நீங்கள் சீனாவின் ஏஜென்டுகளாக இருக்கின்றீர்களா?

ஏனெனில் உங்களைப் பொறுத்தவரை நீங்கள் தொடர்ச்சியாகவே இந்தியாவைச் சாடி வருகின்றீர்கள். அதிலும் நீங்களும் சேர்ந்து செய்கின்ற வேலைகளுக்கும் இந்திய முத்திரை குத்துவது ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆகவே கஜேந்திரகுமாருக்கு மிக மோசமான வகையில் ஒருவித வருத்தம் நிச்சயமாக இருக்கின்றதாகவே நான் நம்புகின்றேன். அதாவது இந்தியா என்று சொன்னாலே அவர்களுக்கு ஒரு விதமான வருத்தம் வருவதாகவேஎனக்குத்தோன்றுகிறது.

ஆகவே அவர் முதலில் தனது நிலைப்பாடுகள், உணர்வுகள் எல்லாம் சரியா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதாகநான்கருதுகின்றேன். ஏனென்றால் பல்கலைக்கழக மாணவர்கள் இந்த ஆறு கட்சிகளையும் அழைத்து பேசியிருந்தார்கள். அதற்கமைய ஐந்து முறை கலந்து பேசி ஐந்தாம் முறையாக இறுதியில் கையொப்பம்வைக்கக்கூடிய சூழ்நிலையில் தான் இவர்கள் ஒரு கோரிக்கையை ஏற்கும்படி கூறினார்கள். ஆனால் அதை பல பேர் ஏற்கவில்லை.

இன்று இந்த ஆவணத்தில் இருக்கக்கூடிய அனைத்தும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்கள் என்றே மீண்டும் சொல்கின்றேன். ஆறு கட்சிகளும் ஏற்றுக்கொண்ட விடயங்கள்தான் ஆவணத்திலும் இருக்கின்றன. அவ்வாறான சூழ்நிலையில் சிங்களக் கட்சிகளிடமும் சிங்கள வேட்பாளர்களிடமும் இது தொடர்பான கருத்துக்களைக் கேட்கக்கூடிய சூழ்நிலையில் இதற்கு எதிராகப் பேச முனைவதும் இதனை விமர்சிப்பதென்பதும் என்ன அடிப்படையில் என்பது விளங்கவில்லை.

தாங்கள் சொன்ன மாற்றத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தால் இப்போதுகூடக் கையெழுத்து வைக்கத்தயாராக இருக்கிறாம் என அவர்கள் கூறுகிறார்கள். இப்போதும் அவ்வாறு கூறுபவர்கள் என்ன அடிப்படையில் இது இந்திய ஏஜென்டுகள் கொண்டு வந்த விடயம் என்று கூறுவார்கள்.?

அப்படிக் கூறுவதாக இருந்தால் தாங்கள் சொன்ன மாற்றத்தைச் செய்து கையெழுத்து வைப்பதுதானேஅடிப்படையில்வருகின்றது?

குறிப்பாக அண்மையில் அந்தக்கட்சியின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணனுடன் நான் ஒரு தொலைக்காட்சி விவாதத்தில் கலந்துகொண்டிருந்தேன். அதில் அவர் பேசுகின்றபோது இப்பொழுதும் தாங்கள் கூறிய மாற்றத்தைச் செய்வதாக அல்லது தங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக இருந்தால்கையெழுத்துவைக்கத் தயார் என்று சொல்லியிருந்தார்.

ஆகவேதங்களுக்குள் தேவையற்ற முரண்பாடுகளை அவர்கள் வளர்த்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்த முரண்பாடுகள் குறித்து அவர்கள் யோசிக்கவேண்டும். ஆகவே அந்த முரண்பாடுகளை கைவிட்டு என்ன வழியில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம்என்றுபார்க்கவேண்டும். வெறும் சித்தாந்தங்களையும் தத்துவங்களையும் பேசிக் கொண்டிருப்பதனூடாக இதனைத் தீர்க்க முடியாது.

இதற்குச்சரியானபொறிமுறைகளை – வழிமுறைகளை – கண்டு கொள்ளவேண்டும். இயன்ற வரை அதற்கான சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. எடுக்கப்பட்ட சில முயற்சிகளைக் குழப்பத் தேவையில்லை. ஆனால் அந்த முயற்சிகள் அத்தனையும் சரியாக வரவேண்டுமென்றும் அல்ல. அதில் பல பிரச்சினைகளும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அவரது கட்சியினரும் இந்தப் பிரச்சினைகளின் முக்கியத்துவங்களைப் புரிந்து கொண்டு ஊடகங்களுடன் பேசுவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் – என்றார். (ஐ-07)

## ரணில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆலோசனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நவம்பர் 16 ஆம் திகதி இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய நிச்சயம் வெற்றி பெறுவார். அவர் வெற்றி பெற்றாலும் அரசமைப்பின் படி மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது. எனினும் குறுகிய காலமானாலும் மீண்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலானஐக்கியதேசியக்கட்சியுடன் இணைந்துஆட்சிசெய்யமுடியாது.

எனவே நாட்டு மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராக சமர்ப்பிக்கும் குற்றப் பிரேரணையைப் போன்று கோட்டாபய ராஜபக்ஷ சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட கருத்தாகும். மாறாகக் கட்சியின் தீர்மானமாக இதனைக் கருதக் கூடாது – என்றார். (ஐ)

## பணத்துக்காகவே..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பு முடிவெடுத்தால், நிதிப் பரிமாற்றங்கள் இருக்க வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

தனது ருவிற்றர் பக்கத்தில் அவர் நேற்று இதனைப் பதிவிட்டுள்ளார்.

ஐ.தே.க தமிழர்களுக்கு எதையும்செய்யவில்லை. அப்படியிருந்தும், ஐ.தே.கவை ஆதரிப்பதெனக் கூட்டமைப்பு முடிவெடுத்தால் நிதிப்பரிமாற்றம் இருக்க வேண்டுமெனஅவர்கூறியுள்ளார்.

## பௌசி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எச்.எம் .பௌசி.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உங்களின் நிலைப்பாடு என்ன? அமைதியாக இருக்கிறீர்களே? என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

சுதந்திரக் கட்சி என்ன நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்பது பிரச்சினையல்ல.ஆனால் ஜனாதிபதி மைத்திரி ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளார். ஊழல் செய்யாத மோசடி செய்யாத ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டுமென அவர் விரும்புகிறார்.அது மறைமுகமாக சஜித் ஆதரவே.எனவே நான் ஜனாதிபதியை பின்பற்றுகிறேன் – என்றார் பௌசி.

என்னதான் இருந்தாலும் சுதந்திரக் கட்சி தீர்மானம் எடுத்து கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்கிறது.அதன் தலைவர் மைத்திரி தானே ? என்ற கேள்விக்கு பதிலளித்த பௌசி – நாட்டின் தலைவர் மைத்திரிதானே.அவரது அரசு என்று தானே சொல்கிறார் எனவே நாம் அதே நிலைப்பாட்டில் நான் இருக்கிறேன் என்றார்.

சரி..நேரடியாகவே சொல்லுங்கள்..கோட்டாபயவா? சஜித்தா ?யாரை ஆதரிக்கிறீர்கள் ? என்று கேட்டபோது பதிலளித்த பௌசி எம் பி – சஜித் என்றார். (ஐ)

## வித்தியானந்தக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியானந்தக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றியவர் ஓய்வுபெற்று சென்று, ஒரு வருடம் கடந்த நிலையிலும் இதுவரை பாடசாலைக்கு அதிபர் நியமனம் செய்யப்படவில்லை.

இந்நிலையிலேயே பாடசாலையின் பழைய மாணவர்கள், பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் நலன்விரும்பிகள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன் மற்றும் கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், க. விஜிந்தன், த.அமலன், இ. ஜெகதீசன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர். (ஐ)

## மணியந்தோட்டம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை இன்று புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிவான்நீதிமன்றம்உத்தரவிட்டது.

கொலை செய்யப்பட்டவரின் மூத்த சகோதரியின் கணவரும் அவரது தந்தையும் தமது சட்டத்தரணி ஊடாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலைசரணடைந்தனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் ஏ.பீற்றர் போல் முன்னிலையில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டனர்.

இந்தக் கொலை தொடர்பான இறப்பு விசாரணை இன்று யாழ்ப்பாணம் நீதமன்றில் இடம்பெறவுள்ளதால் சந்தேகநபர்கள் இருவரையும் இன்று வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம், அரியாலை – மணியம் தோட்டம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை (ஒக்.15) மாலை இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் மணியந்தோட்டம் 5ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த கொன்ஸ்ரன் கலஸ்ரன் (வயது–33) என்பவரே கொலை செய்யப்பட்டார்.

இளைஞனை அவரது மூத்த சகோதரியின் கணவரே கொலை செய்தார் என்று கூறப்படுகிறது. சகோதரியின் கணவருக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு உண்டு எனவும், அந்தப் பெண்ணைத் தேடிச்சென்ற இளைஞன் தனது சகோதரியின் வாழ்க்கையைப் பாழாக்கவேண்டாம் என்று அந்தப் பெண்ணைக் கண்டித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதையடுத்து, மேற்படி இளைஞர் தன்னை மிரட்டினார் என அந்தப் பெண் சம்பந்தப்பட்டவருக்குத் தகவல் வழங்கினாராம். அதனால் சீற்றமுற்ற அந்த நபர், அவரின் தந்தை இளைஞரைப் பிடித்து வைத்திருக்க கோடரியால் இளைஞரின் கழுத்தில் கொத்தியமையுடன், கண்மூடித்தனமாக இளைஞரைத் தாக்கினார் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## கோட்டைவிடப்பட்ட வாய்ப்பு

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஓர் அத்தியாயம் மூடப்பட்டு, புதிய அத்தியாயம் முளைவிடும் காலகட்டம் இது.

2015 ஜனவரியில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்தின் பத்து வருடங்கள் என்ற அரசியல் அத்தியாயம் முடிவுக்கு வந்தது.

அப்போது ஆரம்பித்த மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரம் இன்னும் 25 நாள்களில் முடிவுக்கு வருகின்றது.

புதிய அத்தியாயத்தில் எழுச்சி கொள்ளப் போகின்ற தரப்பு ராஜபக்ஷக்களோ அல்லது பிரேமதாஸவோ என்பதை அறிய நாம் இன்னும் மூன்றரை வாரங்கள் பொறுத்திருக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களது அரசியல் வாழ்வில் பொன்னான ஒரு சந்தர்ப்பத்தைத் தந்த அரசியல் அத்தியாயம் முடிவுக்கு வரப்போகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்ட மன வருத்தத்துடன் இந்த வாய்ப்பான அரசியல் அத்தியாயத்திற்கு முடிவுரை எழுதும் நிலையில் தமிழர்கள் இருக்கின்றார்கள்.

2015 ஜனவரியில் ஏற்பட்ட அரசியல் அதிரடி மாற்றங்களின் கீழ் கிடைத்த அரிய அரசியல் வாய்ப்புத் தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு வரலாற்று திருப்பம்.

அதுவும், 2018 ஒக்ரோபரில் மைத்திரி - மஹிந்த முன்னெடுத்த அரசியல் சூழ்ச்சி நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் தோற்கடிக்கப்பட -

2019 ஜனவரியில் நல்லாட்சி அரசு முற்றாகச் சீரழிந்து போக ஐக்கிய தேசிய முன்னணி அமைத்த 'சிறுபான்மை அரசு' என்ற நிலைப்பாடு தமிழர்களைப் பொறுத்தவரை மிகப் பெரிய வரலாற்றுத் திருப்பம்.

அது முன்னெப்போதும் கிடைத்திராத வாய்ப்பு. இனி எதிர்காலத்திலும் குறுகிய ஒரு காலத்துக்குள் கிடைக்க முடியாத பெரும் சந்தர்ப்பம்.

அந்த வாய்ப்பை எல்லாம் தமிழர் தரப்பு சரிவரப் பயன்படுத்தவில்லை - கோட்டை விட்டுவிட்டது - என்பதே பரவலாகத் தமிழர்களின் அபிப்பிராயமாகும்.

அதிகாரத்தில் இருக்கும் அரசு நீடிப்பதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் நாடாளுமன்ற வலுவைக் கைவசம் வைத்துக் கொண்டும் எதுவும் செய்ய முடியாத - கையாலாகத்தனமான போக்கில் - காலம் கடந்து செல்ல அனுமதித்த தமிழர் தலைமைகள் குறித்து மக்கள் விசனம் கொள்வதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

கிடைத்த மாகாணசபை முறைமையையும் எமக்குள் முட்டி மோதி, குழப்பிப் போட்டடித்து விட்டோம். உருப்படியாக எதுவும் சாதிக்கவில்லை - ஒருவரை ஒருவர் குறை சொல்லியமை தவிர.

அதிகாரங்களைப் பகிர்ந்து மாகாணசபை மூலம் விடயத்தைக் கையாள வலியுறுத்துவதே நமது பண்பியல்பாக இருக்க வேண்டும்.

ஆனால், அதற்குத் தலைகீழான முறையில் நாம் செயற்பட்டிருக்கிறோம்.

ஒரு புறம் மாகாணசபையைச் செவ்வையாக நாம் இயக்கவில்லை.

மறுபுறம், இங்கு செயற்படுத்தக் கூடிய மாகாண சபையில் அதிகாரங்களைக் கூட மத்திய அரசு கையாளும் நிலைமைக்கு நாமே வெற்றிலை வைத்து அழைத்து நிற்கின்றோம்.

மாகாண சபை மூலம் அபிவிருத்திகளை முன்னெடுப்பதை விடுத்து எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூலம் - அவர் கால்களில் விழுந்து - கம்பெரலியத் திட்டத்துக்கு நிதி ஒதுக்கச் செய்கின்றனர். அதனைத் தமது நேரடியான கண்காணிப்பில் செலவிட வைக்கின்றனர்.

உண்மையில் நமது எம்.பிக்கள் கம்பெரலியத் திட்டம் மூலம் - அந்நிதியை - பிரதேச செயலர்கள் மற்றும் செயலகங்கள் மூலம் விடயத்தைக் கையாளுகின்றனர்.

அவை, பிரதேச சபைகள் மூலமோ மாகாண சபைகள் மூலமோ முன்னெடுக்கப்படும் திட்டங்களே அல்ல. மத்திய அரசின் கீழ் செயற்படும் பிரதேச செயலகங்கள் மூலம் - முன்னெடுக்கப்படும் மத்திய அரசின் நடவடிக்கைகள்தான் அவை.

மாகாண சபை முறைமையை முடக்கிவிட்டு, மத்திய அரசின் கைகளான பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச செயலர் போன்றோர் மூலம் இத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுத்தின்றமையால் இவை அதிகாரப் பகிர்வு முறைமைக்கு மாறானவைதான்.

அந்தப் போக்குக் கூட்டமைப்பு எம்.பிக்களும் துணை போகின்றமை பெரும் விசனத்துக்குரியதே.

தற்போதைய வரலாற்று சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டு விட்டு - அதிகாரப் பகிர்வுக்கு மாறாக - மத்திய அரசின் அதிகாரப் பிரயோகத்துக்கு வெற்றிலை வைத்தவர்களாக நாம் மாறியுள்ளோம்.

# யாழ்ப்பாணம்- திருச்சி இடையே விரைவில் விமான சேவைகள்!



கொழும்பு, ஒக். 23

சென்னை மற்றும் திருச்சியில் இருந்து, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்குப் பறக்கும் வணிக விமானங்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதில் திருச்சியில் உள்ள விமானக் கட்டுப்பாட்டு அறை முக்கிய பங்கு வகிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை சென்னையில் இருந்து முதல் விமானம் யாழ்ப்பாணத்துக்குப் பயணத்தை மேற்கொண்டது. இதன்போது திருச்சியில் உள்ள கட்டுப்பாட்டு அறையே அந்த விமானத்தைக் கண்காணித்தது.

சென்னையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டமாக, யாழ்ப்பாணத்துக்கும் திருச்சிக்கும் இடையிலான விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

திருச்சி விமானக் கட்டுப்பாட்டு அறை யாழ்ப்பாணத்துக்கு மிக நெருக்கமாக இருக்கிறது. எனவே, ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் - சென்னை இடையிலான விமானங்களின் இயக்கத்தைத் திருச்சி விமான கட்டுப்பாட்டு அறையில் இருந்தே கண்காணிக்கவுள்ளோம். பின்னர், சென்னை விமான கட்டுப்பாட்டு அறை அதனைப் பொறுப்பேற்றுக் கொள்ளும்.

கடந்த செவ்வாய்க்கிழமை திருச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பரீட்சார்த்த, விமானத்தை இயக்கியிருந்தோம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தை தென்னிந்திய நகரங்களான சென்னை, திருச்சி மற்றும் கொச்சி ஆகியவற்றுடன் இணைப்பதில் கவனம் செலுத்தப்படும்.

இது தவிர, யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே உள்நாட்டு விமான சேவைகளும் தொடங்கப்படவுள்ளன.

வணிக விமானங்களை இயக்குவதற்கு, யாழ்ப்பாண விமான நிலையத்தைத் தயார்ப்படுத்துவதில் இந்திய விமான நிலையங்கள் ஆணையம், முக்கிய பங்கு வகித்ததாகவும், அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், யாழ்ப்பாண விமான நிலையத்தின் வணிக நடவடிக்கைகள், சரக்குத் துறைக்குப் பயனுள்ளதாக இருக்க வாய்ப்பில்லை என்றும் கூறப்படுகிறது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட திருச்சியை சேர்ந்த சுற்றுலா ஏற்பாட்டாளர் எஸ்.வெங்கடாசலம், தற்போது, திருச்சி - கொழும்பு இடையே தினமும் இரண்டு விமான சேவைகள் இடம்பெறுகின்றன. இவை பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துக்கு நல்ல பயனை அளித்து வருகின்றன.

திருச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் ஒரு புதிய விமானம் சேவையில் ஈடுபட்டால், அது பயண மற்றும் சுற்றுலாத்துறைக்கு உதவியாக இருக்கும்.

இருப்பினும், யாழ்ப்பாண விமான நிலையத்தினால் சிறிய விமானங்களை மட்டுமே கையாள முடியும் என்பதால் சரக்குத் துறை பயனடைய வாய்ப்பில்லை. என்று கூறினார்.

அதேவேளை, யாழ்ப்பாண விமான நிலையத்தில் இருந்து தற்போதைக்கு, 72 ஆசனங்களைக் கொண்ட ஏ.ரி.ஆர். விமானங்களையே இயக்க முடியும் என்பதால், முதலில் சென்னையில் இருந்தும், அடுத்து, திருச்சி மற்றும் கொச்சியில் இருந்தும் யாழ்ப்பாணத்துக்கான சேவைகளை நடத்தவிருப்பதாக அலையன்ஸ் எயர் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# சஜித்துக்கு எதிரி அவரது கருத்துக்களே!

## கூறுகிறார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஒக். 23

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, பிரசாரக் கூட்டங்களின்போதே தொடர்ச்சியாக பேசிக் கொண்டுவந்தால், கோட்டாவின் வெற்றி உறுதியாகிவிடும் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு, சஜித் பிரேமதாஸவுக்கு எதிரி அவரது கருத்துக்களே என்றும் அவர் குறிப்பிட்டார்.

பெலியத்த பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இம்முறை நாம் வரலாற்றிலேயே இல்லாத அளவிலான பெரும் வெற்றியைப் பெறுவோம்.

ஏப்ரல் 21ஆம் திகதி இலங்கையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டமையையும் இராணுவத்தினரின் இன்றைய நிலைமையையும் நாம் மறந்துவிடவில்லை.

தற்போது, எமது எதிர்த்தரப்பு ஜனாதிபதி வேட்பாளர், மக்களுக்காக உயிரையும் தியாகம் செய்யத் தயார் என்று கூறுகிறார். இரவில் 11 மணிக்குத் தூங்கி, காலை 4 மணிக்கு எழும்புவதாகக் கூறுகிறார். உண்மையில் பிரேமதாஸவின் மகனுக்கு எதிரி, அவரது வாய்தான்.

நாம் அவரை எதிர்த்துப் பிரசாரம் செய்யவேண்டியத் தேவை கிடையாது. அவர் இதுபோல தொடர்ந்தும் பேசிக் கொண்டே இருந்தால் எமது வெற்றி உறுதியாகிவிடும் - என்றார். (ஐ)

# வவுனியாவில் பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்க முற்பட்டாரென இளைஞர் கைது



வவுனியா, ஒக். 23

வவுனியாவில் போக்குவரத்துப் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்ட இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா நகரப்பகுதியில் நேற்று முன்தினம் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் நின்றபோது வீதியில் வந்த மோட்டர் சைக்கிள் ஒன்றை மறித்து ஆவணங்களைச் சோதனை செய்துள்ளனர்.

அந்த மோட்டர் சைக்கிளில் பயணித்தவர்களிடம் உரிய ஆவணங்கள் காணப்படவில்லை. இதன்போது அவர்கள் போக்குவரத்துப் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்டனர் என்றும் இதன்போது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ-100)

**நாளை** 24.09.2019 வியாழக்கிழமை

நட்சத்திரம்: மகம் மு.ப 10.39 வரை
திதி : ஏகாதசி மு.இ. 7.06 வரை

இராகுகாலம் : 1.32 - 3.02
சுப நேரம் : 7.32 - 3.02

# மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 23
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**
மாவடி, காளிகோவிலடி மூளாய், K.M.K. கடலுணவு பிறைவேட் லிமிட், பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடி, பொன்னாலை கொலணி, காரைநகர்ப்பிரதேசம், காரைநகர் கடற்படை முகாம், காரைநகா விடுதி, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, ஊரி, தோப்புக்காடு, வலந்தலை, வியாவில், கருங்காலி, களபூமி, Ceynor Foundation Ltd, மாதகல், காஞ்சிபுரம், ஜம்பு கோலபட்டிணம், குசுமாந்துறை, காட்டுபுலம், கழுவாத்துறை, அராலி ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**
கைவேலியிலிருந்து புதுக்குடியிருப்பு, Hydramani ஆடைத்தொழிற்சாலை, புதுக்குடியிருப்பு 682ம் படைப்பிரிவு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில் -**
செட்டிக்குளம் நகர பிரதேசத்தின் ஒரு பகுதி, உளுக்குளம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில் -**
தலைமன்னார் கிராமம், படப்பாடி, தலைமன்னார் Palmyra house ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# வடக்கில் மழை பொழியும்



கொழும்பு, ஒக். 23
வட மாகாணத்தில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்ட வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மாகாணத்திலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வட மாகாணத்தில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்னல் தாக்கங்களினாலும் பலத்த காற்றினாலும் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (ஐ)

# படைகளை நானே வழி நடத்தினேன்!

## கோட்டாபய பரபரப்புப் பேச்சு



கொழும்பு, ஒக். 23
போரை முடிவுக்குக் கொண்டுவரப் படையினரை வழிநடத்தியது தாமே என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தினத் தீவிரவாதத் தாக்குதல் இடம்பெற்று 06 மாதங்களாகின்றன. மஹிந்த ராஜபக்ஷவுக்கு 2005ஆம் ஆண்டில் அதிகாரத்தை வழங்கியபோது இந்த நாட்டில் சவாலாக இருந்த போர், எல்லா இடங்களிலும் குண்டுவெடிப்புக்கள் என்பன இருந்தன.

மீண்டும் ஆயுதப்போர் ஏற்படாத வகையில் புலனாய்வுப் பிரிவு, படையினரை நாங்கள் ஈடுபடுத்தி நடவடிக்கை எடுத்திருந்தோம். அதனால்தான் எமது காலத்தில் தீவிரவாதம் தலைதூக்க வில்லை.

இனத் தீவிரவாதம் ஏற்படாத வகையில் குழுக்களை நியமித்து செயற்பட்டிருந்தோம். ஆனால் இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் தேசிய பாதுகாப்பில் அக்கறை செலுத்தவில்லை.

இந்த அரசின் அமைச்சரவைக்கும் தேசிய பாதுகாப்பு பற்றிய விளக்கம் இருக்கவில்லை. அதனால் போரை வெற்றிகொண்ட படையினரது மனங்களை அரசு உடைத்தது.

எமது பாதுகாப்பு வேலைத் திட்டங்களையும் இரத்துச் செய்தது. புலனாய்வு அதிகாரிகளைப் போலியான குற்றச்சாட்டுக்களின் மூலம் சிறையில் தள்ளியது.

சர்வதேசத்துக்குச் சென்று சர்வதேச நீதிமன்றில் எமது படையினரை நிறுத்துவதற்கும் முயற்சி செய்தது. அதனால்தான் மீண்டும் தீவிரவாதம் இந்த நாட்டில் தலைதூக்கியது.

தேசிய பாதுகாப்பு குறித்து துளியளவேனும் அறிவில்லாத அரசுக்கு மீண்டும் ஆட்சிக்குவர முடியாது. இந்த நாட்டிலிருந்த தீவிரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்த எங்களால் மட்டுமே அந்தச் சவாலை முறியடிக்க முடியும்.

மீண்டும் ஆட்சிக்கு வந்தால் சிறப்பான வேலைத்திட்டத்தை அமுல்படுத்தி புலனாய்வுப் பிரிவுக்குச் சட்டப் பாதுகாப்பை வழங்கி பாதுகாப்பான நாடாக மாற்றுவேன். நான் ஏற்றுக்கொண்ட அனைத்து கடமைகளையும் சரிவர நிறைவேற்றினேன்.

பாதுகாப்புச் செயலாளரான நான் இரண்டரை வருடங்களில் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகப் படையினர், புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸாரை ஒருங்கிணைக்க முடிந்தது.

போர் முடிந்த பின்னர் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கொழும்பு நகரை அபிவிருத்தி செய்தேன். ஆகவே மக்களின் கடமைகளை நிறைவேற்ற நான் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் – என்றார்.

இதேவேளை, கடந்த வாரம் இடம்பெற்ற பகிரங்க ஊடகவியலாளர் சந்திப்பில் அப்போதைய பாதுகாப்புச் செயலாளராகக் கடமையாற்றிய தாம் போரை வழிநடத்தவில்லை என கோட்டாபய ராஜபக்ஷ கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹேமசிறி பெர்னாண்டோவிடம் 3 மணித்தியாலங்கள் விசாரணை



கொழும்பு, ஒக். 23
முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோஊழல், மோசடிகள் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகி மூன்று மணித்தியாலத்துக்கும் அதிகமான நேரம் சாட்சியம் அளித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னிலையாகிய ஹேமசிறி பெர்னாண்டோவிடம் இவ்வாறு சாட்சியம் பெறப்பட்டதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஹேமசிறி பெர்னாண்டோ மக்கள் வங்கியின் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் 2016 ஆம் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வங்கிக்கு கணினிகளைக் கொள்வனவு செய்ததில் நிதிமோசடியில் ஈடுபட்டார் என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பாகவே அவரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் முன்னிலையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை உடைத்தவர் சந்திரிகா தான்!

## மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 23
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தி புதிய கட்சியை ஏற்படுத்தியது சந்திரிகா குமாரதுங்கவே . நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் துண்டாக்கவில்லை. நாங்களும் அந்தக் கட்சியின் பங்காளியாவோம் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.


நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த அமரவீரவின் இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த தேர்தல் காரியாலயத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எமது தாய் வீடு. பண்டார நாயக்கவும் டீ.ஏ. ராஜபக்ஷவும் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி இதனை நிர்மாணித்தனர். அதனால் நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினர். எமக்குள் இருக்கும் வித்தியாசம், நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையாததாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் இணைந்திருப்பதால் நாங்கள் சக்தி மிக்க கட்சியாக மாறி இருக்கின்றோம்.

அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பமாகத் துண்டாக்கி புதிய கட்சி ஒன்றை ஏற்படுத்தியது நாங்கள் அல்லர். சந்திரிகாவும் விஜேகுமாரதுங்கவுமே. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் துண்டாக்கியே மஹஜன கட்சியை அமைத்தனர். ஆனால் நாங்கள் கட்சியைத் துண்டாக்கிக் கொண்டு செல்லவில்லை.

அத்துடன் ஏப்ரல் 5 ஆம் திகதி தீவிரவாத தாக்குதல் தொடர்பிலான அனைத்து தகவல்களும் அடங்கிய கடிதம் இந்த அரசுக்கு கிடைத்தது. ஆனால் அரசு தூங்கிக்கொண்டிருந்தது. புலனாய்வுப் பிரிவினர்களை சிறைப்படுத்தியமையே இந்த நிலைக்குக் காரணம் – என்றார். (ஐ)

யதீந்திரா



# அகவை 80 இல் விக்னேஸ்வரன்

நீதியரசர் கனகசபாபதி விசுவலிங்கம் விக்னேஸ்வரன் அவர்கள் இன்று அகவை 80 இல் கால்பதிக்கின்றார். நீதித்துறையில் பல்வேறு பதவிகளை வகித்து பின்னர், இலங்கை உயர்நீதி மன்றத்தின் நீதியரசராக உயர்ந்தவர். இந்தக் காலத்தில் அவர் தமிழ் பற்றாளர், சைவசமய ஈடுபாட்டாளர், தமிழ்த் தேசிய இனஉணர்வாளர் எனப் பல முகங்களில் அறியப்பட்டிருந்தார்.

விக்னேஸ்வரன் உயர்நீதிமன்ற நீதியரசராக பதவிப்பிரமாணம் செய்தபோது, அவர் ஆற்றிய உரை அப்போது அதிகம் பேசப்பட்ட ஒன்று அதே வேளை சிங்கள கடும்போக்குவாதிகளால் அது அதிகம் எதிர்க்கப்பட்ட ஒன்றாகவும் இருந்தது. அன்றைய சூழலில், சிங்கள ஆளும்வர்க்கத்தின் கூடாரத்திற்குள் இருந்துகொண்டே அவ்வாறானதோர் உரையை நிகழ்த்த வேண்டிய தேவை எதுவும் விக்னேஸ்வரனுக்கு இருந்திருக்கவில்லை. தனது உரை சிங்கள ஆளும்வர்க்கத்திற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தாது என்பதை அறிந்தே விக்னேஸ்வரன் அதனைச் செய்தார்.

சிங்கள நீதித்துறைக்குள் இருந்த போது, அந்த நீதித்துறைக்கு எந்தளவிற்கு விசுவாசமாக இருந்தாரோ, அந்தளவிற்கு தனது இனத்திற்கும் அந்த இனத்தின் நியாயங்களுக்கும் அவர் விசுவாசமாக இருந்தார். சர்வதேச மோதல் ஆய்வுக்குழுவின் வார்த்தையில் சொல்வதானால் இலங்கையின் நீதித்துறை என்பது, அரசியல் மயப்படுத்தப்பட்ட நீதிமன்றங்களையும் சமரசப்படுத்தப்பட்ட உரிமைகளையும் (Srilanka 's Judiciary: Politicised Courts, Compramised rights) கொண்டவையாகும்.

இந்த நீதித்துறைக்குள் விக்னேஸ்வரன் ஒரு தமிழராகவும் இலங்கையின் நீதிபதியாகவும் இருந்தார் என்பதுதான் உண்மை. விக்னேஸ்வரன் தனது இனத்தின் உரிமைகள் மீது காண்பித்த சமரசமற்ற விசுவாசமும் ஈடுபாடும்தான் அவரை தமிழ்த் தேசிய அரசியலுக்குள் கொண்டு வர வேண்டும் என்னும் எண்ணத்தை பலருக்கும் கொடுத்தது. விக்னேஸ்வரனது அரசியல் பிரவேசம் ஒரு தற்செயல் நிகழ்வுதான். ஆனால் அந்த தற்செயல் நிகழ்வானது, இன்று அவரை தமிழ்த் தேசிய அரசியலில் தவிர்க்க முடியாத ஆளுமையாக்கிவிட்டது.

2013இல் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்டதன் மூலம் தனக்கு முற்றிலும் பழக்கமில்லாத ஒரு துறைக்குள் அவர் கால்பதிக்க நேர்ந்தது. அவர் வடக்கு மாகாண சபையின் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின்னணியில் அவர் தெரிவித்திருந்த கருத்துக்களும் இப்போது அவர் தரித்து நிற்கும் இடமும் அவர் அதிகம் அரசியலால் புடம் போடப்பட்டதன் விளைவுகள்தான்.

2013 ஜூலையில் விக்னேஸ்வரன் சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் இப்படிக் கூறியிருந்தார். லண்டனிலிருந்து தன்னை தொடர்புகொண்ட ஒரு பத்திரிகையாளர் ஒருவர் சுயநிர்ணய உரிமை தொடர்பிலும் அதனோடு தொடர்புடைய விடயங்களை பற்றியும் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு நான் இவ்வாறு பதிலளித்திருந்தேன். இவைகள் எல்லாம் அரசியல்வாதிகளுக்குரியவை. நான் ஓர் அரசியல்வாதியல்லன். நான் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கான நிவாரணங்களை ஏற்படுத்திக்கொடுப்பதிலேயே கரிசனை கொண்டிருக்கிறேன். இதனை முன்வைத்து அப்போது நான் ஒரு கட்டுரையையும் எழுதியிருந்தேன். இவ்வாறு கூறும், விக்னேஸ்வரன் ஐயா ஓர் அரசியல்வாதியாகும் காலம் விரைவில் ஏற்படும்.

அதிலிருந்து அவர் ஒருபோதுமே விலகிச் செல்ல முடியாது. இன்று விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் கூட்டணி என்னும் ஒரு கட்சியின் தலைவர், தமிழ்த் தேசிய அரசியலை வழிநடத்தும் ஒரு தவிர்க்க முடியாத ஆளுமை. ஒரு மாற்றுத் தலைமைக்கான குறியீடு. இவைகள் எவையுமே விக்னேஸ்வரன் விரும்பி ஏற்றுக்கொண்டவை அல்ல. அவரது விருப்பங்களையும் தாண்டி அவரை தழுவிக்கொண்டவையே இவையனைத்தும்.

முன்னர் அவர் கூறிய பல கூற்றுக்களை அவரே மறுதலிக்க நேர்ந்திருக்கிறது. முன்னர் சரியென்று அவர் நம்பிய விடயங்கள் பலவற்றிலிருந்தும், அவர் நம்பிய நபர்கள் சிலரிலிருந்தும், அவர் விலகியும் விலத்தியும் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. இவைகள் அனைத்தும் விக்னேஸ்வரன் என்னும் தலைவர், வடக்கு மாகாண சபை முதலமைச்சர் என்பதிலிருந்து, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் என்னும் நிலைக்கு மாறிய காலகட்டத்தின் விளைவுகளாகும்.

அகவை 80 இல் கால்பதிக்கும் விக்னேஸ்வரனுக்கு முன்னால் இன்னும் பல அரசியல் நிகழ்வுகளும், அந்த நிகழ்வுகள் தரும் சவால்களும் காத்திருக்கின்றன. வடக்கு மாகாண சபை முதலமைச்சராக இருந்த காலத்திலும் அதன் பின்னரான அரசியல் செயற்பாடுகளின் போதும், விக்னேஸ்வரன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனது உறுதியை தளரவிட்டதில்லை.

தான் கூறும் வார்த்தைகளுக்கும் அதனை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளுக்கும் நேர்மையான ஒருவராகவே இருந்திருக்கிறார். 2013 இல் வடக்கு மகாண சபையில் போட்டியிடுவதற்கு முன்னர் அவர் தனிப்பட்ட ரீதியில் சில பார்வைகளை வரித்துக்கொண்டிருந்த போதிலும் கூட, 2013 ஒக்ரோபரில் இடம்பெற்ற மாகாண சபை தேர்தலில், விஞ்ஞாபனமொன்றை முன்வைத்து போட்டியிட்டு வெற்றிபெற்ற பின்னர், அதற்கு மாறாக ஒருபோதும் அவர் பேசியதில்லை.

அதிலிருந்து நாம் விலகிச்செல்ல வேண்டுமாயின் மீண்டுமொரு விஞ்ஞாபனத்தை முன்வைத்துத்தான் அதிலிருந்து விலக வேண்டுமென்று உறுதியாக இருந்தார். அந்த உறுதியே அவரை பலரும் திரும்பிப் பார்க்க வைத்தது. ஒரு மக்கள் தலைவன் மக்களுக்கு கொடுக்கும் வாக்குறுதிகளிலிருந்து, மக்களின் ஆணையின்றி ஒரு போதும் விலகமுடியாது என்பதே அவரது அரசியலாக இருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் அவருக்கு முன்னால் மீண்டுமொரு சவால் குறுகிடுகின்றது.

அண்மையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் உட்பட, ஐந்து கட்சிகள் கூட்டாக ஒரு இணக்கப்பாட்டிருற்கு வந்திருந்தன. இதனடிப்படையில் 13 அம்ச கோரிக்கைகள் அடங்கிய ஆவணம் ஒன்றில் அனைத்து கட்சிகளின் தலைவர்களும் கையெழுத்திட்டிருந்தனர். அதில் விக்னேஸ்வரன் அவர்களும் ஒருவர். அந்த அடிப்படையில், இரண்டு பிரதான வேட்பாளர்களுடனும் பேச்சு நடத்துவதென்றும் அதற்கு அமைவாகவே அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திப்பதென்றும் முடிவுகாணப்பட்டிருந்தது.

ஆனால் அதன் பின்னர் வெளியான செய்திகளோ ஒன்றுக்கு பின் ஒன்று முரணாக இருக்கின்றன. ஆவணம் இல்லாமல் சந்திக்கப் போவதாக ஒரு கட்சி கூறுகின்றது. இதற்கிடையில் தனித் தனியான சந்திப்புக்கள் இடம்பெறுகின்றன என்றும் கூறப்படுகின்றது. கூட்டமைப்பு தனியாக பேசியதாகவும் செய்திகள் வெளிவருகின்றன. அவ் வாறாயின் விக்னேஸ்வரனும் கையெழுத்திட்ட அந்த ஆவணத்தின் பெறுமதி என்ன? இந்த ஆவணத்திலிருந்து கட்சிகள் விலகிச் செல்லுமாக இருந்தால் அந்த ஆவணத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் பெறுமதி என்ன? குறித்த ஆவணத்தின் அடிப்படையில் இரண்டு பிரதான வேட்பாளர்களுடனும் பேச்சு நடத்துவதாக குறிப்பிடப்பட்ட போதிலும் இதுவரை அது நிகழவில்லை. பிரதான வேட்பாளர்களில் ஒருவர் அதனை ஏற்கனவே நிராகரித்துவிட்டார்.

நிலைமைகளை உற்றுநோக்கும் போது, காலத்தை இழுத்தடித்துவிட்டு பின்னர் வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிடும் தேர்தல்கால வாக்குறுதிகள் போல்தான் இவையுமா? என்னும் கேள்வியே எழுகின்றது. இது அகவை 80 காணும் விக்னேஸ்வரன் அவர்கள் எதிர்கொள்ளப் போகும் புதிய சவால். இதனை அவர் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார் என்பதும் அவரது அரசியல் வாழ்வின் பதிவாக மாறும்.

விக்னேஸ்வரன் திட்டமிட்டு அரசியலை தெரிவு செய்யவில்லை ஆனால் அவர் அரசியலில் பிரவேசித்த பின்னர், தமிழ்த் தேசிய அரசியலில் நிகழும் ஒவ்வொரு விடயங்களும் அவரது வாழ்வை செதுக்கியிருக்கிறது.

அவர் செதுக்கப்பட்டுக் கொண் டிருப்பதன் விளைவுகளே அவரது அரசியல் நகர்வுகள். ஒவ்வொரு நகர்வுகளும் அவரைச் செதுக்கியிருக்கின்றன. இப்போது ஏற்பட்டிருக்கும் சூழலை எதிர்கொள்ளவும் அவர் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டியிருக்கிறது. விக்னேஸ்வரன் எந்தளவிற்கு உறுதியாக இருக்கின்றாரோ அந்தளவிற்கு அவர் தமிழ்த் தேசிய அரசியலில் தவிர்க்க முடியாத குறியீடாக இருப்பார். ★

## அகவை நாளில் அகமகிழ்வாய் வாழ்த்துகின்றோம்...!

தன்னிகரில்லா தடம்பதித்த
நீதியரசரே
தமிழினம் காத்திருக்க
தலைநிமிர்த்த எழுக


நேர்கொண்ட பார்வை, வீறுற்ற பீடு நடை ,
யார்க்கும் அஞ்சிடாத நெஞ்சுடனே
சுடர் விடு ஞானச் செருக்கு,
சத்தியத்தை பேணுதற்காய்,
எம்மின உரிமைதனை நிலைநாட்டுதற்காய்
எதனையும் இழந்திடத் தயங்கிடாத தியாக சிந்தை,
அத்தனையும் கண்டோம்
உம்தன் ஞானியாம் தோற்றத்துள்ளே

எழுக தமிழில்
எழுச்சியாய் நீதந்த உரை
சர்வதேசத்து ,
பன்மொழி ஊடகங்களிலும்
பேசுபொருளாயிற்றே
எம்மினத் துயரமெல்லாம்
எல்லோரும் அறிந்திடவே
நேர்மையாய் உரைத்திட
உன்னைவிட்டால்
யாரிருக்கார் ?

புண்பட்ட நெஞ்சங்கள் பலவுண்டு இங்கே!
கண்ணீர் பெருக்கெடுக்கும் துயர்
நிறைஞ்சிருக்கிங்கே!
துயர் களைவார் யாருமில்லை.
மருந்திடுவார் யாருமில்லை.

விதைத்திட்ட உறுதிமொழிகள் மறந்து
தம்மடி நிரப்ப ஜாலவார்த்தை பேசும்
தலைவர்களை நம்பியா தமிழினம் வாழ்வது!
வாயில் காத்து நிற்போன்
வீட்டை வைத்து இழத்தல் போலே
இனவுரிமை அடைவுவைத்து
தம் பதவி காத்திருக்கும்
தலைவர் தாமா தமிழர்க்கு வழிகாட்டி !

தத்தளிக்கும்
எம்மினத்தை காத்திட எழுக,
தரணியிலே பல்லாண்டு
சிறப்போடு வாழ்க
அகவை எண்பது காணும்
இந்நாளில்
அகமகிழ்வாய்
வாழ்த்துகிறோம்



**ஆ.சிவயோகன்**
**வல்வெட்டித்துறை.**

# சிலியில் வெடித்தது பெரும் வன்முறைப் போராட்டம்

## அரசு தொழிற்சாலைக்கும் தீ; பதினொரு பேர் வரையில் சாவு!



சாண்டியாகோ,ஒக்.23

லத்தீன் அமெரிக்க நாடான சிலியில், மெட்ரோ ரயில் கட்டணத்தை அரசு உயர்த்தியது. இதைக் கண்டித்து, அந்நாட்டு மக்கள் கடந்த வெள்ளிக்கிழமை போராட்டத்தில் குதித்தனர்.

தலைநகர் சாண்டியாகோ மற்றும் அன்டோபகாஸ்டா, வால்பராசோ, வால்டிவியா, சில்லான், டால்கா, டெமுகோ மற்றும் பூண்டா அரினாஸ் ஆகிய நகரங்களில் போராட்டக்காரர்கள் பெரும் வன்முறையில் ஈடுபட்டனர்.

இதனால் அசாதாரண சூழ்நிலை உருவானதை தொடர்ந்து, இந்த நகரங்களில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அத்துடன் போராட்டத்தை கட்டுப்படுத்தும் விதமாக மெட்ரோ ரயில் கட்டண உயர்வை ரத்து செய்வதாக அதிபர் செபாஸ்டியன் பினெரா அறிவித்தார். ஆனாலும் போராட்டக்காரர்கள் போராட்டத்தைக் கைவிடாமல் தொடர்ந்து வருகின்றனர். மேலும் அவர்கள் பஸ்கள், கடைகள் உள்ளிட்டவற்றுக்கு தீவைப்பது போன்ற வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.




கடந்த சனிக்கிழமை இரவு சாண்டியாகோ நகரில் உள்ள ஒரு சுப்பர்மார்க்கெட்டுக்கு போராட்டக்காரர்கள் தீவைத்தனர். இதில்4 பேர் பலியானார்கள். மேலும் சாண்டியாகோ உள்பட பல்வேறு நகரங்களில் போராட்டக்காரர்கள் மற்றும் பொலிஸார் கடுமையாக மோதிக்கொண்டனர்.



இதற்கிடையே இந்தக் கலவரத்தை பயன்படுத்தி கொள்ளையர்கள் கடைகள் மற்றும் தொழிற்சாலைகளைச் சூறையாடிக் கொள்ளையடித்து வருகின்றனர்.

ஞாயிறு இரவு சாண்டியாகோ நகரில் உள்ள அரசு ஜவுளி தொழிற்சாலைக்குள் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்து பொருள்களைக் கொள்ளையடித்ததமையோடு, தொழிற்சாலைக்கு தீவைத்து விட்டும் சென்றனர். இதில் தொழிற்சாலைக்குள் இருந்த 5 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

சில்லான் நகரில் போராட்டக்காரர்களைக் கலைக்கப் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

# சிரியாவில் சண்டை நிறுத்தத்துக்கு மத்தியில் எல்லையில் இருந்து குர்துக்கள் வெளியேற்றம்

அங்காரா,ஒக்.23

துருக்கியுடனான சண்டை நிறுத்த ஒப்பந்தத்தின்படி சிரியா வடக்கு எல்லையில் இருந்து குர்து படையினர் வெளியேறினர்.

சிரியாவின் வடக்கு பகுதியில் இருக்கும் குர்து படையினரை விரட்டியடித்துவிட்டு ஒரு பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்கி அங்கு துருக்கியில் உள்ள 36 லட்சம் சிரிய அகதிகளைக் குடியமர்த்த வேண்டும் என்று துருக்கி நினைக்கிறது.

இதற்காக சிரியாவின் வடக்கு பகுதியில் இருக்கும் குர்து இனப் படையினரை குறிவைத்து, துருக்கி இராணுவம் தொடர்ந்து 8 நாள்களாகத் தாக்குதல் நடத்தியது.

துருக்கியின் இந்த தாக்குதலில் அப்பாவி மக்கள் உள்பட நூறுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளமையோடு, 4 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடம் தேடி இடம்பெயர்ந்தனர்.

இந்த விவகாரம் தொடர்பில் துருக்கி மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்து, சண்டையை நிறுத்தும்படி எச்சரித்தது. அத்துடன் அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸும், வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோவும் நேரடியாகத் துருக்கிக்குச் சென்று அதிபர் தாயீப் எர்டோகணைச் சந்தித்து இது குறித்துப் பேசினர்.

இந்த பேச்சின் முடிவில் சிரியாவின் வடக்கு பகுதியில்5 நாள்களுக்குச் சண்டையை நிறுத்திவைப்பதாக கடந்த வியாழக்கிழமை எர்டோகண் அறிவித்தார்.

இந்த 5 நாள்களுக்குள் துருக்கி 'பாதுகாப்பு மண்டலம்' என்று வரையறுக்கும் பகுதியில் இருந்து குர்து படையினர் வெளியேற வேண்டுமெனத் துருக்கி கூறியது.

ஆனால் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தாக்குதலில் ஈடுபட்டதாக துருக்கி இராணுவமும், குர்து படைகளும் பரஸ்பரம் குற்றம் சாட்டின.

இதையடுத்து, செவ்வாய்க்கிழமைக்குள் குர்து படைகள் பாதுகாப்பு மண்டலத்தை விட்டு வெளியேறாவிட்டால் தாக்குதல் மீண்டும் தொடங்கப்படும் என்றும், குர்துக்களின் தலை நசுக்கப்படும் என்றும் எர்டோகண் எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிலையில் துருக்கியின் எல்லையையொட்டி சிரியாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள ராஸ் அல்-அய்ன் நகரில் இருந்து குர்து படைகள் வெளியேறின.

இதுபற்றி குர்து படையின் செய்தி தொடர்பாளர் கூறுகையில், சண்டை நிறுத்த ஒப்பந்தத்தின் படி எங்களது கட்டுப்பாட்டு பகுதியான ரஸ் அல்-அய்ன் நகரில் இருந்து வீரர்கள் வெளியேறினர். அந்த நகரில் தற்போது எங்கள் வீரர்கள் யாரும் இல்லை என்றார்.

குர்து படைகள் தங்கள் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து வெளியேறியமையால் சிரியாவின் வடக்குப் பகுதியில் முழுமையான சண்டை நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




முன்னதாக சிரியாவின் வடக்கு எல்லை பகுதியில் அமைந்துள்ள தல் தமர் நகரில் முகாமிட்டு இருந்த அமெரிக்க இராணுவ வீரர்கள் நேற்றுமுன்தினம் அங்கிருந்து வெளியேறினர்.

இராணுவ விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் மற்றும் கவச வாகனங்களில் அமெரிக்க வீரர்கள் சிரியாவில் இருந்து புறப்பட்டு அண்டை நாடான ஈராக்குக்குச் சென்றனர்.

அமெரிக்க படைகள் புறப்படுவதற்கு முன்னதாக சிரியாவின் அல் ஹசாகா பகுதியில் இருந்த தங்களது விமான தளங்கள் மீது தாங்களே குண்டு வீசி அனைத்தையும் அழித்து விட்டு சென்றுள்ளன என சிரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# சிறிய ரக விமானம் விழ்ந்து பிரேசிலில் 3 பேர் உயிரிழப்பு

பிரேசில் நாட்டில் விமானம் ஒன்று புறப்பட்ட சிறிது நேரத்தில், குடியிருப்பு பகுதியில் விழுந்து நொறுங்கி தீப்பற்றியதில் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அங்குள்ள கர்லோஸ் பிரேட்ஸ் விமான நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் காலை தனிநபர் இயக்கிசென்ற சிறிய ரக விமானம், பெலோ ஹாரிசான்டே குடியிருப்பு பகுதி வழியாக பறந்து கொண்டிருந்தபோது, திடீரென கீழே விழுந்து, தெரு சாலையில் நின்ற 3 கார்கள் மீது மோதி வெடித்தது.

இந்த கோர விபத்தில் விமான பயணி, பாதசாரி ஒருவர் மற்றும் காரில் இருந்த ஒருவர் என 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப கோளாறு அல்லது இன்ஜின் பழுது காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதா என்பது இன்னும் தெரியாத நிலையில், அதிகாரிகள் அதுகுறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.






## தமிழ்மொழிக்கு முதலிடம்

# பலாலி விமான நிலைய புதிய பெயர்ப்பலகை படுத்தும் பாடு!

இலங்கைத்தீவின் வரலாற்றில் ஒக்ரோபர் 21 ஆந்திகதியும் இற்றைக்கு 6 மாதங் களுக்கு முன்னரும் ஒரு துன்பியல் சம்பவம் நடந்தது. 32 ஆண்டுகளுக்கு முன்னரும் ஒரு துன்பியல் பதிவு இடம்பெற்றது.

சரியாக கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ஏப்ரலில் இதேநாளான 21 இல் ஐ.எஸ் அமைப்பின் உயிர்த்த ஞாயிறு கந்தக நாசகாரத் தாக்குதல்கள் இடம் பெற்றிருந்தன. அதேபோல 32 ஆண்டுகளுக்கு முன்னர் இதே ஒக்ரோபர் 21 இல் அமைதிப்படை என்ற அடையாளத்துக்குரிய இந்தியப்படையினர் யாழ் போதனா வைத்திய சாலையில் நடத்திய குரூரமான தாக்குதலில் வைத்தியர்கள் தாதியர்கள் உட்பட்ட பணியாளர்களும் பலியான நாளும் இதுதான்.

இவ்வாறான முக்கிய துன்பியல் சம்பவங்கள் இடம்பெற்ற அதேதீவில் இப்போது அந்த துன்பியல் காலங்களின் நினைவூட்டல்களுடன் சிறிலங்காவின் முதன்மைத்தலையாரியின் தெரிவுக்குரிய தேர்தல் களப்பரபரப்புகள் நகர்த்தப்பட்டு வருகின்றன. ஆயினும் தமிழர் தரப்பை பொறுத்தவரை இந்தத் தேர்தலில் எவ்வாறான முடிவை எடுப்பது என்ற துல்லியமாக திசைவழியோ அல்லது பேசுபொருளோ தெரியவில்லை.




ஆயினும் எதிர்வரும் தேர்தலில் எவ்வாறான முடிவை எடுப்பது என்பது தொடர்பான தமது முடிவு எதிர்வரும் 24ஆம் திகதி வெளியிடப்படும் என கூட்டமைப்பின் முகங்கள் கூறுகின்றன.

இந்தவாரம் இடம்பெறும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் முடிவில் எந்த வேட்பாளரைஆதரிப்பது இல்லையென்றால் இந்தத் தேர்தலில் எப்படி செயற்படுவது என்ற முடிவு எடுக்கபடுமெனவும் கூறப்படுகிறது.

ஆக மொத்தம் மலிந்தால் சந்தைக்கு வரும் என்பதே இந்த விடயத்தில் இப்போதைக்கு கூறவும் முடியும். ஆனால் தெற்கிலோ நிலைமைகளுக்கு ஏற்ப திட்டமிட்டபடி களநிலைவரங்களை கையாளும் தினுசு தினுசான யுக்திகள் கையாளப்படுகின்றன.

அந்த வகையில் பலாலியில் கடந்த 17ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் பெயர்ப்பலகையை மையப்படுத்திய புதிய இனவாதப்பேசுபொருள் உருவாக்கப்படுகிறது. குறிப்பாக தெற்கில் இருந்து புறப்படும் சமூக வலைத்தளங்களில் இது இப்போது சூடுபிடித்திருக்கிறது.

இலங்கைத்தீவில் உள்ள சிறிலங்கா சோசலிச ஜனநாயக குடியரசில், சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படும் நிலையில், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பெயர்ப் பலகைகளில் எப்படி தமிழ்மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படலாம் என்பதே இப்போது சிங்களக்கடும்போக்காளர்களின் தலையாய பிரச்சினையாக மாறியுள்ளது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடத்தில் தமிழ்மொழிக்கு முதலிடம் வழங்கப்படுவதில் இந்த மாதனமுத்தா சீடர்களுக்கு என்னதான் பிரச்சினையோ தெரியவில்லை. ஆனால் சிறிலங்காவில் முக்கிய தேர்தல் களம் ஒன்றுவரும் நிலையில் இவ்வாறான ஒரு பேசு பொருளை வலிந்துஉருவாக்கி அதன் மூலமாக நாடு பிரிக்கப்பட்டு விட்டதா? சிங்கள மஹா ஜன தாவே என கூக்குரல் இடுவதன் மூலம் தேசிய வாத வாக்குவங்கியை உசுப்பேற்ற இவர்கள் முனைவது பகிரங்கம்.

ஆனால் இவ்வாறான ஐயோ சிங்கள மொழிப்பெருமையின் வடைபோச்சே வாய்ப்பன் போச்சே என சாதாரண பெயர்ப்பலகை ஒன்றை மையப்படுத்தி சமூக வலைத்தளங்களில் போலித் தேசபக்தி குய்யோ முறையோ போடும் மாதன முத்தாக்கள் தமிழரின் கோவில் வளாகத்தில் காவியுடை தரித்த

## அரசமைப்பை வாசித்தறியாத தற்குறிகள்

ஒருவரின் பிணத்தை எரிக்கும் போது இல்லையென்றால் சிறிலங்காவின் அரசமைப்பில் எந்த ஓர் அட்சரம் கூடஇல்லாத சீனர்களின் மன்டரின் மொழி தெற்கின் சில இடங்களில் உள்ள பெயர்ப்பலகைகளில் இருந்தாலும் கப்சிப்பாக இருந்து விடுவார்கள்.

ஏன் காத்தான்குடி போன்ற பகுதிகளில் அரபு மொழிக்கு முன்னுரிமை வழங்கிய பெயர்ப் பலகைகள் பளிச்சிட்டதும் இதேதீவில் தானே? ஆனால் வடமாகாணத்தின் மொத்தச் சனத் தொகையில் பெரும்பான்மை வகிபாகத்தைக் கொண்ட பூர்வீக மக்கள் பேசும் மொழி ஒரு பெயர்ப்பலகையில் இரண்டுசாண் ஏறினால் குத்துதே குடையுதே கதைதான்.

இதற்கும் அப்பால் சிறிலங்காவின் அரசமைப்புக்கு தாமே கோபுரம் தாங்கிப்பூதங்கள் என மார்தட்டும் இந்த கடும்போக்கு மாதன முத்தாக்கள் அதே அரசமைப்பில் கூறப்பட்ட ஒரு முக்கிய விடயத்தை கணக்கில் எடுக்கவும் தயாராகவும் இல்லை.

சிறிலங்காவின் அரசமைப்பின்படி சிங்கள மொழி அரசகரும மொழி அதேபோல தமிழும் அரசகருமமொழியெனவும் ஆங்கிலம் இணைப்பு மொழியெனவும் கூறப்படுகிறது. அதாவது இலங்கைத்தீவு முழுவதும் சிங்களமும், தமிழும் நிர்வாக மொழிகளாக உள்ளன.

ஆயினும் வடக்கு கிழக்கு தவிர்ந்த இலங்கையின் ஏனைய மாகாணங்களிலும் சிங்களம் நிர்வாக மொழியாக இருத்தல் வேண்டுமெனவும் வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் தமிழ்மொழி நிர்வாகமொழியாக பயன்படுத்தப்படுதல் வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

ஒரு மாகாணத்தின் மொத்தச் சனத் தொகையின் விகிதாசாரத்தைக் கருத்திற்கொண்டு சிங்களம், அல்லது தமிழை இடப்பரப்பிற்கான நிருவாக மொழியாகப் பயன்படுத்த சிறிலங்கா வின் அரச தலைவர் பணிப்புரை விடுக்கலாம் எனவும் அரசமைப்பின் மொழிகள் தொடர்பான ஷரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதை பலாலி விமான நிலைய பெயர்ப்பலகையில் தமிழ்முன் னுக்கு வந்துவிட்டதே என மாரடிக்கும் மாதன முத்தாக்கள் கணக்கில் எடுக்கவும் தயாராக இல்லை.

ஆகமொத்தம் பெயர்ப் பலகையில் சிங்கள வடை போச்சே என குரல் கொடுப்பவர்கள் யாமே காவலர்கள் எனகோஷிக்கும் கடும்போக்காளர்கள் சிறிலங்காவின் அரசமைப்பைக்கூட சரியாக வாசித்தறியாத தற்குறிகளும் தாமே என்பதை தம்மைத்தாமே நிரூபித்துவருகின்றனர்.

நன்றி – பி.பி.ஸி.தமிழ்

> பலாலியில் கடந்த 17ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் சர்வ தேச விமான நிலையத்தின் பெயர்ப் பலகையை மையப்படுத் திய புதிய இனவாதப் பேசுபொருள் உருவாக் கப்படுகிறது. குறிப்பாக தெற்கில் இருந்து புறப் படும் சமூக வலைத் தளங்களில் இது இப் போது சூடுபிடித்தி ருக்கிறது.இலங்கைத் தீவில் உள்ள சிறிலங்கா சோசலிச ஜனநாயக குடியரசில், சிங்கள மொழிக்கு முன்னுரிமை வழங் கப்படும் நிலையில், யாழ்ப் பாணம் சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பெயர்ப் பலகை களில் எப்படி தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்படலாம் என்பதே இப்போது சிங்களக் கடும் போக்காளர்களின் தலையாய பிரச்சி னையாக மாறியுள்ளது.



# இந்திய குழுவினருக்கு தேநீர் வழங்க மறுத்தது இலங்கை விமானப் படை

## யாழ்ப்பாணம் விமான நிலையத்தில்

கொழும்பு, ஒக். 23

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை ஆரம்பிப்பதற்கு விமானப்படைத் தளபதி ஒத்துழைக்க வில்லை என்றும், இந்திய தொழில்நுட்பக் குழுவுக்கு தேநீர் கூட வழங்க மறுத்தார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூல், 'கொழும்பு ரெலிகிராப்' இணையத்தில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய திறப்பு விழாவில் பங்கேற்றது தொடர்பாக ஒரு கட்டுரையை எழுதியுள்ளார்.

அந்தக் கட்டுரையிலேயே அவர் இந்த விவரங்களை வெளியிட்டுள்ளார். அவரது கட்டுரையில் இதுபற்றிக் கூறப்பட்டுள்ளதாவது;

யாழ்ப்பாண விமான நிலையத்தை ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுவதற்குப் பதிலாக, அந்தத் திட்டம் இனவாத பொறாமைக்கு உள்ளானது. விமானப்படைத் தளபதி ஒத்துழைக்கத் தவறிவிட்டார்.

2019 செப்ரெம்பர் 16ஆம் திகதி, வந்திருந்த இந்தியத் தொழில்நுட்பக் குழுவினர் கடுமையான வேலைகளின் பின்னர் தேநீர் கேட்டனர்.

அதற்கு அவர், இந்தியர்கள் இதனை தமிழர்களுக்காக செய்கிறார்கள். நீங்கள் என்னிடம் தேநீர் பரிமாற வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? என்று கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து, சோர்ந்துபோன இந்தியக் குழுவினர், பிற்பகல் 2 மணியளவில் தமக்குப் புத்துணர்ச்சியைப் பெறுவதற்காக ஜீப்பை காங்கேசன்துறைக்கு அனுப்பினர் என்று அவர் அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மலையகத்தில் கனமழை!



கொழும்பு, ஒக். 23

மலையகத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகியுள்ளதுடன் தீபாவளி வர்த்தகமும் சோபையிழந்துள்ளது.

மலையகத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையை அடுத்து ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் பல இடங்களில் மண் சரிவு அபாயம் நிலவி வருவதுடன் கலுகல, பிட்டவர, கினிகத்தேனை, கடவல, வட்டவளை ஆகிய பகுதிகளிலும், ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் குடாகம, கொட்டகலை, சென்கிளயார், தலவாக்கலை, ரதல்ல, நானுஓயா பகுதிகளிலும் அடிக்கடி பனிமூட்டம் காணப்படுவதால் இந்த வீதிகளைப் பயன்படுத்தும் சாரதிகள் மிகவும் அவதானமாகப் பயன்படுத்துமாறு ஹற்றன் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீரேந்தும் பிரதேசங்களில் தொடர்ச்சியாக பெய்த அடை மழை காரணமாக காசல்ரி, கெனியோன், மவுசாகலை, லக்ஸபான மேல்கொத்மலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் மிக வெகுவாக உயர்ந்துள்ளதுடன் விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தில் நீர் வான் பாய்கின்றது. (ஐ)

# சீரற்ற காலநிலையால் ஐந்து பேர் உயிரிழப்பு

## 8,213 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 23

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை ஐவர் உயிரிழந்துள்ளதுடன், 2250 குடும்பங்களைச் சேர்ந்த 8213 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு 11 பேர் காமடைந்துள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம், மண்சரிவு, மின்னல் தாக்கம் போன்ற பல்வேறு அனர்த்தங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்த அனர்த்தங்கள் காரணமாக 27 வீடுகள் முழுமையாகவும் 690 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. அனர்த்தங்கள் காரணமாக 111 குடும்பங்களைச் சேர்ந்த 446 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# வெற்றியை நோக்கி ஹரி ஆனந்தசங்கரி

மொன்றியல், ஒக். 23

கனேடிய நாடாளுமன்றத்துக்கு நேற்று நடைபெற்ற தேர்தலில் ஆளும் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஹரி ஆனந்தசங்கரி 63 வீத வாக்குகளுடன் வெற்றி பெறும் நிலையில் இருக்கிறார் எனறொறன்ரோஸ்டார் செய்தி வெளியிட்டுள்ளது.



2015 தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்காபரோ ரூஜ் பார்க் தொகுதியிலேயே லிபரல் கட்சி சார்பில் மீண்டும் ஹரி ஆனந்தசங்கரி போட்டியிட்டிருந்தார்.

196 தேர்தல் அறிக்கைகளில், 172 அறிக்கைகள் வெளியான நிலையில் ஹரி ஆனந்தசங்கரி தெளிவான பெரும்பான்மையுடன் முன்னிலை வகிக்கிறார். அவருக்கு 63 வீத வாக்குகள் கிடைத்துள்ளன.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கொன்சர்வேட்டிவ் கட்சியின் பொப்பி சிங் 19 வீத வாக்குகளையே பெற்றுள்ளார். புதிய ஜனநாயக கட்சி வேட்பாளருக்கு 11 வீதமும் கிறீன் கட்சி வேட்பாளருக்கு 4 வீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

கடந்த முறை ஹரிஆனந்தசங்கரி இதே தொகுதியில் 60 வீத வாக்குகளையும், கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் 27 வீத வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

அதேவேளை, கனேடிய நாடாளுமன்றத் தேர்தலில், ஆளும் லிபரல் கட்சி பெரும்பான்மை பலத்தை இழக்கின்றபோதும் அதிகளவு ஆசனங்களுடன் முன்னிலை வகித்து வருகிறது. (ஐ)

# அமெரிக்காவின் தமிழ் விஞ்ஞானி யாழ். இந்துக் கல்லூரிக்கு வருகை

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் விஞ்ஞானி பேராசிரியர் சிவா.சிவானந்தன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் இந்து கல்லூரிக்கு வருகை தந்தார்.

கல்லூரியின் முதல்வர் ரட்ணம் செந்தில்மாறன் அவருக்கு வரவேற்பளித்தார். விஞ்ஞானி பாடசாலை மாணவர்களையும் சந்தித்து தனது அனுபவங்களைப் பகிர்ந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் தற்போது அமெரிக்காவின் விஞ்ஞானியுமான சிவானந்தனுக்கு பாடசாலை மாணவர்களினால் நினைவுப்பரிசில் வழங்கப்பட்டது. (ஐ)



# ஈழத்து நாடகக் கலைஞர் டேமியன் சூரி பிரான்ஸில் நாடக மேடையில் மரணம்!

பரிஸ், ஒக். 23

ஈழத்து நாடகத்துறை நட்சத்திரமான டேமியன் சூரி பிரான்சில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கூத்து அரங்காற்றுகையின் போது மேடையிலேயே உயிரிழந்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் புறநகர் பகுதியான அபர்வில்லர்ஸ் என்ற இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

பிரான்ஸ் திருமறைக் கலா மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் கலைவண்ணம் கலை நிகழ்வின் சிறப்பு அரங்காற்றுகையாக தங்கத் தமிழ் வேந்தன் என்ற நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது.

இந்த நாட்டுக் கூத்தை இயக்கி அதில் கும்பகர்ணன் பாத்திரமேற்று, நடித்திருந்த டேமியன் சூரி கூத்து நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, இராமனால் எய்யப்பட்ட அம்பு தைத்து வீழ்வதாக நடித்த படியே மேடையிலேயே உயிரிழந்தார். இச்சம்பவமானது தமிழ் கலையுலகினர்க்கு பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் – குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், குருநகர் இளைஞர் கலைக்கழகத்தின் மூலம் 1960 களின் இறுதியில் கலையுலகிற்கு அறிமுகமாகியிருந்தார். அதன் பின் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேடைகளில் பங்கேற்றிருந்த நிலையில், 1980களில் தயாரிக்கப்பட்ட பலிக்களம் என்ற திரைப்படத்திலும் முக்கிய பாத்திரமேற்று நடித்திருந்தார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கலையுலகிற்கு அருஞ்சேவையாற்றிய இவர், அரங்கிலேயே உயிரை அர்ப்பணித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545




# போராட்டத்தில் குதித்த பங்களாதேஷ் வீரர்கள்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி வீரர்கள், கிரிக்கெட் போட்டிகளில் விளையாட மறுப்புத் தெரிவித்து போராட்டத்தில் குதித்துள்ளனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் முன்வைத்துள்ள கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தாம் எந்தவித கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடமாட்டோம் என அணியின் வீரர்கள் போர்க் கொடி உயர்த்தியுள்ளனர்.

பங்களாதேஷ் பிரிமீயர் லீக் மற்றும் டாக்கா பிரிமீயர் லீக்கில் விளையாடும் உள்நாட்டு வீரர்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டதன் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்தது.

இந்த நிலையில், இதற்கு சிரேஷ்ட வீரர்கள் உட்பட பலர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதற்குப் பதிலாக வீரர்கள் பல்வேறு யோசனைகளையும், கோரிக்கைகளையும் பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் முன்வைத்தனர்.

எனினும், அதற்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, செவிமடுப்பதாக இல்லை. இதனால் வீரர்கள் போராட்டத்தில் குறித்துள்ளனர்.

இதுகுறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைவர் ஷகிப்அல்ஹசன், மெஹ்முதுல்லா, முஷ்பிகுர் ரஹிம், டமீம் இக்பால், ருபெல்ஹெசைன், மொயிடிஹசன் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளனர்.

இதில் ஷகிப் அல் ஹசன் கூறுகையில், எங்களது போராட்டத்தில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான அணியை சேர்க்கவில்லை. ஏனெனில், அவர்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் இங்கே இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் எங்களுடன் இருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

நாங்கள் கிரிக்கெட் விளையாடப்போவதில்லை. எங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நாங்கள் திரும்பமாட்டோம் எனக் கூறினார்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, அடுத்த மாத முதல் வாரத்தில் இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரி-20 மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இதற்கிடையில் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் சபைகளுக்கிடையிலான பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.



# வென்றார் பெடரர்!

ரென்னிஸ் உலகில் ஆண்கள் ஒற்றையர்பிரிவில்அதிககிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற பெருமைக்குரிய, சுவிஸ்லாந்தின் ரோஜர் பெடரர் தனது 1500ஆவது மைல்கல் போட்டியில் வெற்றிபெற்றுள்ளார்.

ரோஜர் பெடரர், தற்போது சுவிற்சர்லாந்தில் நடைபெற்றுவரும் உள்ளரங்க ஏடிபி தொடரில் விளையாடி வருகின்றார். இதில் நேற்று முன் தினம் நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டியில், ஜேர்மனியின் பீட்டர் கோஜோவ்ஸிக்கை பெடரர் எதிர்கொண்ட போட்டி அவரது 1500ஆவது மைல்கல் போட்டியாக அமைந்திருந்தது.

இதில் பெரிதளவான சவால்களை எதிர்கொள்ளாத ரோஜர் பெடரர் 6-2, 6-1 என எளிதாக வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

இதன்மூலம் ரென்னிஸ் போட்டிகளில் பீட்டர் கோஜோவ்ஸிக்கை, ரோஜர் பெடரர் மூன்றாவது முறையாக வீழ்த்தினார்.

ஆண்டில் நடைபெறும் முக்கிய தொடர்களை மட்டும் தேர்வு செய்து விளையாடும் ரோஜர் பெடரருக்கு இம்முறை சிறப்பான ஆண்டாக அமையவில்லை.

நான்கு முக்கிய கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டங்களில் இம்முறை, ஆஸ்திரேலியா பகிரங்க ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடர் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடர் இந்த மூன்று தொடரிலும் பெரிதும் சோபிக்காத பெடரர் விம்பிள்டன் இறுதிப் போட்டியில் நோவக் ஜோகோவிச்சிடம் தோல்வி கண்டார்.

இதற்கிடையில், பரிஸில் நடைபெறவுள்ள மாஸ்டர்ஸ் 1000 போட்டித் தொடரில் பங்கேற்பாரா எனக் கேள்வி எழுந்துள்ளது. மேலும் பெடரர் நவம்பரில் லண்டனில் நடக்கவுள்ள ஏடிபி பைனல்ஸ் போட்டித் தொடருக்கும் தகுதி பெற்றுள்ளார்.

இதேவேளை, அடுத்த ஆண்டு ஜப்பானில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தொடரிலும் பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடரிலும் விளையாடுவதற்கு பெடரர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

ரோஜர் பெடரர் இதுவரை 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். இதில் ஆறு ஆஸ்திரேலிய பகிரங்க சம்பியன் பட்டங்கள் ஒரு பிரான்ஸ் பகிரங்க சம்பியன் பட்டம் எட்டு விம்பிள்டன் சம்பியன் பட்டங்கள் ஐந்து அமெரிக்க பகிரங்க சம்பியன் பட்டங்கள் அடங்கும்.

மூன்று வருடங்கள் பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் தொடரில் விளையாடாத ரோஜர் பெடரர் இந்த ஆண்டு நடைபெற்ற தொடரில் அரையிறுதி வரை முன்னேறினார்.

அதேபோல, 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் இறுதிப் போட்டி வரை முன்னேறிய பெடரர் இங்கிலாந்தின் என்டி முரேவிடம் தங்கப் பதக்கத்தை இழந்தார். 2008ஆண்டு ஆண்கள் இரட்டையர் பிரிவில் ரோஜர் பெடரர்-ஸ்டென் வாவ்ரிங்கா ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

சமீபகாலமாக ரென்னிஸ் களத்தில் சோபிக்க தவறிவரும் ரோஜர் பெடரர், எதிர்வரும் ஆண்டுடன் ஓய்வுப் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# இலங்கை கிரிக்கெட் வீரர்களின் புதிய ஊதிய ஒப்பந்தம் வெளியீடு!

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களின் புதிய ஊதிய ஒப்பந்தம் தொடர்பான விவரங்களை, இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

34 வீரர்களின் ஒப்பந்தத்திற்காக கிட்டத்தட்ட 170 கோடி அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதேவேளை, புதிய வீரர்களின் ஒப்பந்தக்காலமாக 14 மாதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

ஏ.பி.சி.டி என நான்கு தரங்களாக பிரிக்கப்பட்டுள்ள இந்த புதிய ஒப்பந்தத்தில் ஆச்சரியப்படும் வகையில், சில வீரர்கள் அதிக தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏ பிரிவில், சகலதுறை வீரர் அஞ்சலோ மெத்தியூஸ் 130,000 அமெரிக்க டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த ஒப்பந்த பட்டியலில் அதிக தொகைக்கு விலை போன வீரராக அஞ்சலோ மெத்தியூஸ் இடம்பெற்றுள்ளார்.

மேலும், ஏ பிரிவில் திமுத் கருணாரத்ன மற்றும் வேகப் பந்துவீச்சாளர் சுரங்க லக்மால் ஆகியோர் 100,000 டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

பி பிரிவில், தினேஷ் சந்திமால் 80,000 அமெரிக்க டொலர்களுக்கும், லசித் மலிங்க 70,000 அமெரிக்க டொலர்களுக்கும், குசல் ஜனித் பெரேரா மற்றும் குசல் மெண்டிஸ் ஆகியோர் 70,000 அமெரிக்க டொலர்களுக்கும், தில்ருவான் பெரேரா, நிரோஷன் டிக்வெல்ல ஆகியோர் 50,000 அமெரிக்க டொலர்களுக்கும், தனன்ஞய டி சில்வா 52,500 அமெரிக்க டொலர்களுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

சி பிரிவில், திசர பெரேரா, நுவன் பிரதீப் ஆகியோர் 50,000 அமெரிக்க டொலர்களுக்கும், லஹிரு திரிமான்ன 35,000 அமெரிக்க டொலர்களுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

டி பிரிவில் அகில தனன்ஞய 50,000 டொலர்களுக்கும், துஷ்மந்த சமீர 30,000 டொலர்களுக்கும், தனுஷ்க குணத்திலக்க 35,000 டொலர்களுக்கும், ரொஷேன் சில்வா மற்றும் விஷ்வ பெர்னாந்து 25,000 டொலர்களுக்கும், லக்ஷன் சந்தகன் மற்றும் இசுரு உதான ஆகியோர் 40,000 டொலர்களுக்கும், அவிஷ்க பெர்னாந்து மற்றும் தசுன் ஷானக்க ஆகியோர் 30,000 டொலர்களுக்கும், லஹிரு குமார 35,000 டொலர்களுக்கும், ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர, சதீர சமரவிக்ரம, அமில அபொன்சோ, ஒசத பெர்னாந்து, செஹான் ஜயசூரிய, அஞ்சலோ பெரேரா, கசுன் ராஜித மற்றும் லசித் எம்புல்தெனிய ஆகியோர், புதிய ஒப்பந்தத்தில் 20,000 அமெரிக்க டொலர்களுக்கு இணைந்துள்ளனர்.

இவர்கள்தவிர ஜெப்ரிவண்டர்சே, அசித்தபெர்ணாந்து மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோர் 15,000 அமெரிக்க டொலர்களுக்கும், வனிந்து ஹஸரங்க 25,000 அமெரிக்க டொலர்களுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை உபுல் தரங்க, அசேல குணரத்ன, லஹிரு கமகே, கௌசால் சில்வா, செஹான் மதுசங்க, மலிந்த புஷ்பகுமார மற்றும் டில்சான் முனவீர போன்ற வீரர்களும் புதிய ஒப்பந்தத்தில் நீக்கப்பட்டுள்ளனர்.

## பாடசாலைக்குள்ளேயும் வெடித்த பெரமுன - ஐ.தே.கட்சி மோதல்!

### பாடசாலைக் கட்டடம் திறப்பு நிறுத்தம்

கொழும்பு, ஒக். 23

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் ஏழு மாடிக் கட்டடத் திறப்பு விழாவைத் தேர்தல்கள் ஆணைக்குழு நிறுத்தியுள்ளது.

ஆனந்தாக் கல்லூரியின் கட்டடத்திற்கு 2015 ஜனவரியில் அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோட்டாபயவினால் அடிக்கல் நட்டப்பட்டது. அதன் கட்டுமானப் பணிகள் முழுமையடையாத நிலையில் நேற்றுப் பிரதமர், கல்வியமைச்சர் அதனை திறந்து வைப்பதாக இருந்தது.

எனினும், அது தேர்தலை இலக்காகக் கொண்ட நடவடிக்கையென தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, இந்த விடயத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு தலையிட்டது.

நிகழ்வை நிறுத்துமாறு அறிவுறுத்தியுள்ளோம். கொழும்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் இது குறித்து விசாரணை நடத்தி வருகிறார் எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கட்டடம் கட்டி முடிக்கப்படாத நிலைமை உள்ளதாகவும், கோட்டாபய அடிக்கல் நட்ட கல்வெட்டு அகற்றப்பட்டு, பிரதமர் மற்றும் கல்வியமைச்சரின் பெயர் கொண்ட புதிய கல்வெட்டு நட்டப்பட்டுள்ளதாகவும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஒருபிரிவு குற்றம்சாட்டியுள்ளது. இந்தப் பிரிவே, தேர்தல் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்தது. (ஐ)

## கோட்டாவுக்கு எதிரான வழக்கு அமெ. நீதிமன்றத்தால் தள்ளுபடி

கொழும்பு, ஒக். 23

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கா - கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கே இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலைக்கு அப்போதைய பாதுகாப்புச் செயலாளராகச் செயற்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அது தொடர்பாக தனக்கு நட்டஈடு பெற்றுத் தருமாறு கோரியும் கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றில் லசந்த விக்ரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்ரமதுங்க இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இந்த வழக்கை தள்ளுபடி செய்வதாக கலிபோர்னியா மாவட்ட நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஐ)

## ராணுவக் கலாசாரத்தைப் பின்பற்றிய ஒருவர் ஜனநாயகப் பாதையில் பயணிப்பது கடினமே!

### கூறுகின்றார் அமைச்சர் வஜிர



கொழும்பு, ஒக். 23

இராணுவக் கலாசாரத்தைப் பின்பற்றிய ஒருவர் ஜனநாயக கலாசாரத்தைப் பின்பற்றுவது மிகவும் கடினமான ஓர் விடயமென அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதன் பின்னர் பெருமளவில் இனவாத மோதல்கள் ஏற்பட்டன.

இதன்போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆற்றிய சேவையை எம்மால் ஒருபோதும் மறக்க முடியாது. எனவே சஜித் அரசில் அவர் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்படுவதில் எவ்வித சிக்கலும் கிடையாது.

அந்தவகையில் நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடைய ஒருவருக்கு நாம் உரிய கௌவரத்தையும் மரியாதையையும் வழங்க முடியுமே தவிர நாட்டை ஒப்படைக்க முடியாது - என்றார்.

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வவுனியாவில் 6 முறைப்பாடுகள்

வவுனியா, ஒக். 23

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வவுனியா மாவட்டத்தில் 06 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என வடமாகாணப் பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.ஜி.லலித் ஆனந்த தெரிவித்தார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் 4140 பேர் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். அவர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முறைகேடுகளாக 6 முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப் பெற்றன. அவை தேர்தலில் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தாத சிறிய முறைப்பாடுகள். இருப்பினும் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமுகமாகத் தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஐ - 100)

## திருமலை - மட்டு இடையே ரயில் சேவைகள் பாதிப்பு



கொழும்பு, ஒக். 23

ரயில் தடம் புரண்டமையினால் திருகோணமலை, மட்டக்களப்பிற்கிடையிலான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் புறப்பட்ட ரயிலின் 5பெட்டிகள், உகண பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் தடம் புரண்டன.

இதனால் இந்தப் பகுதிக்கான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனைத் திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமையினால் ரயில் சேவைகளை மக்கள் மீண்டும் விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் ரயில்வே திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# காரைநகரில் குடும்பத்தலைவர் கொலை; இருவருக்கு நேற்றுத் தூக்குத் தண்டனை

## யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம் காரைநகரில் குடும்பத் தலைவர் ஒருவரைக் கொலை செய்த குற்றத்துக்கு இருவருக்குத் தூக்குத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தீர்ப்பளித்தார்.

2008ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி காரைநகர் பாலாவோடையில் முருகேசு கணேசன் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்யப்பட்டார்.

உறவினர்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு கொலையில் முடிந்தது.

அவரது கொலையடுத்து வைத்தியலிங்கம் கோவிந்தராசன், வைத்தியலிங்கம் துஷ்யந்தன், முருகேசு சந்திரன், ஆறுமுகம் சின்னத்துரை மனோரஞ்சன், கணபதி முருகேசு, குமாரசாமி மல்லிகா, முருகேசு கட்டச்சி, சந்திரன் யோகேஸ்வரி, சின்னத்துரை புவனேஸ்வரி ஆகிய 9 பேர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் ஒன்பது பேரும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்ற நிலையில் அவர்கள் 9 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சம்பவம் இடம்பெற்று 10 ஆண்டுகளின் பின்னர் 2018ஆம் ஆண்டு 9 எதிரிகளுக்கும் எதிரான குற்றப்பத்திரிகை சட்ட மா அதிபரால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் விளக்கம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் இடம்பெற்றது. வழக்குத் தொடுநர் தரப்புச் சாட்சியங்கள், எதிரிகள் தரப்புச் சாட்சியங்கள் நிறைவடைந்து இரு தரப்பு சமர்ப்பணங்களும் முன்வைக்கப்பட்டன.

வழக்கு தீர்ப்புக்காக நேற்று நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் எதிரிகள் 9 பேருக்கும் எதிராக முன்வைக்கப்பட்டுள்ள முருகேசு கணேசனுக்கு கடுங்காயம் விளைவிப்பதைப் பொதுநோக்காகக் கொண்டு சட்டவிரோத கூட்டம் கூடியமை மற்றும் அதன்மூலம் கணேசனுக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளிலிருந்தும் அனைவரும் விடுவிக்கப்படுகின்றனர்.

வழக்குத் தொடுநர் தரப்பால் முன்வைக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட முருகேசு கணேசனுக்கு உயிரிழப்பை ஏற்படுத்தியமைக்காக இலங்கை தண்டனைச் சட்டக் கோவை 32 உடன் சேர்த்து வாசிக்கப்படும் 296ஆம் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய தவறிழைத்தமை குற்றச்சாட்டில் இரண்டாம் எதிரி வைத்தியலிங்கம் துஷ்யந்தன், மூன்றாம் எதிரி முருகேசு சந்திரன் ஆகிய இருவரும் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு இருவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது.

ஏனைய 9 எதிரிகளும் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்து விடுதலை செய்யப்படுகின்றனர் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் தீர்ப்பளித்தார். வழக்குத் தொடுநர் சார்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தினார், எதிரிகள் சார்பில் சர்மினி விக்னேஸ்வரனும் முன்னிலையானார். (ஐ - 07)

# அச்சம் தருகின்றன பரப்புரைகள் அவதானத்துடன் நடக்கவேண்டும்

## கிழக்கு முன்னாள் முதலமைச்சர் எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 23

ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்பின் பரப்புரைகள் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. மறைமுகமாக பௌத்த பேரினவாதத்தை ஊக்குவிக்கும் கருத்து பகிர்வுகளையே தொடர்ந்து பார்க்கமுடிகின்றது. இதுமட்டுமின்றி சர்வதேசங்களைப் பகைத்துக் கொள்ளும் வகையில் ஆபத்தான கூற்றுகளும் முன்வைக்கப்படுகின்றன. இவை இலங்கையின் எதிர்காலம் என்னவாகும் என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்றன. இப்படித் தெரிவிக்கின்றார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸிர் அஹமட்.

இதுவிடயமாக அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுவதாவது:-

தேர்தல் அறிவிப்பு வந்தது முதல் இதுகால வரையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் அதன் வேட்பாளரும் முன்வைக்கும் கருத்துகளை உற்றுநோக்கினால் அவை அனைத்தும் தாம் அதிகாரத்துக்கு வந்த பின்னர் என்ன நடக்கும் என்பதைத் தெரிவிக்கும் அச் சுறுத்தல் கருத்துகளாக அமைந்திருக்கின்றமையை நாம் அவதானிக்க முடியும்.

சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் எந்தக் கருத்துகளும் இதுவரை அவர்களால் முன்வைக்கப்படவில்லை. சிறுபான்மையினரைப் பொறுத்தவரை அவர்களது வாக்கு முக்கியம் வாய்ந்தது அல்ல என்பதே இந்த முன்னணியைச் சேர்ந்த பலரின் கருத்தாக இருக்கிறது. இதனைச் சிலர் வெளிப்படையாகவே பத்திரிகைகள் மூலம் தெரிவித்தும் வருகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் உச்சமாக ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய இறுதிப் போர் குற்றங்கள் குறித்து விசாரணை செய்வது தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையுடன் தற்போதைய அரசு மேற்கொண்ட உடன்படிக்கையை தாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை எனவும் சிறையில் உள்ள இராணுவத்தினரை தாம் விடுதலை செய்வார் எனவும் தமிழ் கட்சிகளின் ஆதரவு தமக்கு தேவையில்லை எனவும் முரண்பாடான கருத்துகளையே தெரிவித்து வருகிறார்.

அவரது இந்தக் கருத்துகள் உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேசங்களின் பகையை நாட்டின் மீது ஏற்படுத்தும் நிலைமையைக் கொண்டுவரும் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடிக்கும் நிலையிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்பு செயற்படுகின்றது என்பது இதன் மூலம் நிரூபணம் ஆகின்றது.

எனவே, இவ்வாறான சக்திகளை முற்றுமுழுதாக சிறுபான்மை மக்கள் ஒன்றிணைந்து புறம்தள்ள வேண்டும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதேநேரம் ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்குச் சிறுபான்மை மக்களின் மொத்த வாக்குகளும் சென்று விடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு அவர்களால் முன்னெடுக்கப்படும் வாக்குகளைச் சிறடித்தல் என்ற விடயத்தை நம்மவர்கள் சரிவர புரிந்து கொள்ளவேண்டும்.

இதற்காக இறக்கிவிடப்பட்டுள்ள வேட்பாளர்கள் யார் யார் என்பதை மக்கள் அறிவார்கள் எனவே அவர்கள் தமது கடமையை சரிவரச் செய்வார்கள் என நம்பலாம் – என்றுள்ளது. (ஐ)

# கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஒருபோதுமே எற்கமாட்டார் சஜித்!

## ஐ.தே.க. திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 23

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரிவினைவாதக் கோரிக்கைகளை ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஒருபோதும் ஏற்கமாட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு படு பயங்கரமான கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக சமூகவலைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அப்படியான யோசனைகள் முன்வைக்கப்படவில்லை என்பதை கூறிக்கொள்வதுடன், போலித் தகவல்களைப் பரப்பும் கீழ்த்தரமான அரசியல் பரப்புரையை கைவிடுமாறு மஹிந்த தரப்பிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதேபோல் கடந்த நான்கரை வருடங்களில் சமஷ்டி அல்ல, ஒரு பிரதேச செயலகத்தை கூட நாம் வழங்கவில்லை. எனவே, பிரிவினைவாத கோரிக்கைகளை எமது ஜனாதிபதி வேட்பாளர் ஒரு போதும் ஏற்கமாட்டார்.

ஒற்றையாட்சியை ஒருபோதும் கைவிடமாட்டோம். பௌத்த மதத்துக்கான முன்னுரிமையும் பாதுகாக்கப்படும். இது கூட்டமைப்புக்கும் நன்கு தெரியும் – என்றார். (ஐ)

# கலாஓயா பெருக்கெடுப்பு!

கொழும்பு, ஒக். 23

கலாஓயா பெருக்கெடுத்திருப்பதால் பெரும் எண்ணிக்கையான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எம்.ஆர். என்.கே.அழகக்கோன் தெரிவித்தார்.

இந்த நீர்த்தேக்கம் பெருக்கெடுத்தமையால் பழைய எலுவாங்குளத்தினூடாகச் செல்லும் புத்தளம் – மன்னார் வீதி போக்குவரத்துக்கு முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

கடும் மழை பெய்து வரும் நிலையில் ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் எட்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவதானமாக இருக்கும்படி பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர்.

புத்தளம் பிரதேச மக்கள் சீரற்ற கால நிலையின் காரணமாக கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசு முப்படையினரின் ஆதரவைப் பெற்றுள்ளது. (ஐ)

# கோட்டாவுக்கு ஆதரவாகப் பிரசாரம் முன்னெடுப்பதற்கு சு.க. நடவடிக்கை

கொழும்பு, ஒக். 23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றியை உறுதி செய்யும் நோக்கில் நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசாரங்களை முன்னெடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 25ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள 332 பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய 14 ஆயிரத்து 22 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள மக்களைத் தெளிவுபடுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஸ்ரீலங்கா பொதுஜன ஐக்கிய முன்னணி என்ற புதிய கூட்டணி ஒன்றைப் பதிவு செய்யவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார். (ஐ)

# சந்திரிகா சு.கவை அழித்துவிட்டார்!




கொழும்பு, ஒக். 23

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இன்று மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமைக்குக் கட்சியின் முன்னாள் தலைவரான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் பொறுப்புக் கூறவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2015 இல் சந்திரிகா அம்மையார் கட்சியை இரண்டாக உடைத்திருக்காவிட்டால் தற்போது மாற்றுக் கட்சியொன்று உருவாகி இருக்காது.

ராஜபக்ஷாக்களுடனான தனிப்பட்ட பகைமை காரணமாக அன்று அவர் கட்சியைப் பணயம் வைத்து நடவடிக்கைகளை முன்னெடுத்ததாலேயே இன்று சுதந்திரக்கட்சி மூன்றாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனவே, இனிமேலும் அவர் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடமாட்டார் என நம்புகின்றோம். சில தொகுதி அமைப்பாளர்கள் பணத்துக்கு அடிபணிந்து கட்சி மாறலாம். அத்தகையவர்களுக்கு சந்திரிகா தலைமை வகிக்கமாட்டார் எனவும் நம்புகின்றோம்.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி வைத்திருந்தாலும் ஒருபோதும் தனித்துவத்தை விட்டுக் கொடுக்கமாட்டோம். பொதுத்தேர்தலில் பொது சின்னத்தின்கீழ் போட்டியிடுவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.10.2019 இல் வெளியிடப்பெற்றது.